# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. I    Issue 5    August 2011

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்

இம்மாதச் செய்தி ........ 2

அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 3

ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள் ........ 11

சாவித்ரி ........ 13

அன்பர் கடிதம் ........ 15

லைப் டிவைன் ........ 17

P & Pஇல் உள்ள புதுமைகள் ........ 29

அஜெண்டா ........ 42

ஞானக் கண் ........ 45

பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 51

தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 54

லைப் டிவைன் - கருத்து ........ 55

யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 58

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**நாம் ஏற்கும் அன்னை அன்றாட வாழ்வை மீறி நம்மை நாடி வராவிட்டால் நாம் அன்னையை ஏற்ற-தாகுமா?**

**தைரிய லக்ஷ்மியை தனியே வைத்திருக்க முடியாது. அவர் அஷ்ட லக்ஷ்மிகளையும் அழைத்து வருவார்.**

**நமக்கு வேலை, கடமை என்பதில்லை. பலன் அதைக் கடந்தது. சரணாகதி நம் பங்கு. வேலையும் பலனும் அன்னையுடையது.**

*இம்மாதச் செய்தி*

## எவரை விலக்கினாலும்

## யோகமில்லை.



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **இலட்சியவாதியின் அல்ப குணம்**
**இனிமையாகப் பழகுபவரின் மட்டமான சுயநலம்**

- இலட்சியவாதியான பேராசிரியர் பல்கலைக்கழகத்தில் பெரிய சர்வீஸ் செய்து, தமிழ்நாட்டில் பெரும் புகழ் பெற்று, வேலையை இழந்து, கல்லூரிப் பேராசிரியராக ஓய்வு பெற்று, குடும்பத்தில் மனம் உடைந்தார்.
- இனிமையாகப் பழகும் பொல்லாத மனிதன் நாடெங்கும் புகழ்பெற்று, உலகப் புகழ் பெற்று, செல்வாக்கோடு சிறப்பாக இருக்கிறார்.

**எப்படிப் புரிந்து கொள்வது?**

- நல்லதும் கெட்டதும் கலந்து வரும்பொழுது பெரிய இடங்களில் நல்லது அதிகமாகவும், சிறியவரிடம் அல்பம் அதிகமாகவும் வெளிப்படும்படி நடப்பது சுபாவம். அதன் பலன் இது.
- அன்பர்கள் தங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றனர்.
- அடி மட்டத்திலுள்ள சிறப்பு நம்மை நிர்ணயிக்கும். உயர்மட்டத்திலுள்ள குறை நம்மைக் கைவிடும்.
- இது முக்கியமான விஷயம். அல்பம் உலகப் பிரசித்தி பெறுகிறது. இலட்சியம் காலேஜ் பேராசிரியராக ஓய்வு பெறுகிறது.

- நம் சொந்த அனுபவத்தை ஆழ்ந்து, கூர்ந்து கவனித்தால் சட்டம் பளிச்செனப் புரியும்.
- பெரியதும் சிறியதும் எப்படிக் கலந்து முடிவை நிர்ணயிக்கின்றன என்பது பெரிய விஷயம்.
- பர்சனாலிட்டிக்கு நேரம் உண்டு. அந்த நேரம் எது - எந்தப் பக்கம் முனைப்பாக இருக்கிறதோ அதுவே முடிவு செய்யும்.
- பிறந்த நாளன்று Blessing Packetக்கு காத்திராமல் ஒருவர் போகிறார். அதுவும் தொழிலில் பெரிய ஆர்டர் வரும்பொழுது போகிறார் எனில் அந்த ஆர்டர் வாராது எனப் பொருள் (2 ஆண்டுக்குப் பின் அது இல்லை எனத் தெரிந்தது).

*Attitude நோக்கம் நம்மை நமக்கு உணர்த்தும்.*

✡ **சோதனை - நல்லெண்ணம்**
**வெறுப்புள்ள மனிதரிடம் செய்யும் சோதனை**

நல்லெண்ணம் ஒருவருக்கு இருப்பதும், நமக்கு அவர் மீது வெறுப்புள்ளதும் வேறு.

எதுவும் - வெறுப்பும் - முழுசாக இருக்காது.

இமாலயப் பலனை 3 முறை பெற்று கற்பனைக்கெட்டாத பட்டத்தை என் முழு உதவியால் பெற்றதை என்னிடம் சொல்லாமல் என்னை அவமானப்படுத்திய தமிழ்ப் பண்டிதர் எனக்கு மீண்டும் வேலை வாங்கியது போல.

பண்டிதர் மறக்கலாம், துரோகம் செய்யலாம், அவர் பெற்ற பலன் மறக்காதல்லவா?



'நீ வராவிட்டால் உன்னைப் பிடித்த பிசாசு வரச் சொல்லும்'.

தூரத்து உறவு பாட்டிக்குச் சிறு பெண் மீது ஆசை. பாட்டியிடம் பெண் இப்படிப் பேசுகிறாள்.

பிசாசும் வரச் சொல்லும், ஒரு காலத்தில் நினைத்த நல்லெண்ணமும் செயல்படும்.

நல்லெண்ணம், கெட்ட எண்ணம், பாராட்டு, திறமை எதுவானாலும் ஒரு முறை உள்ளே வந்துவிட்டால் போகாது. ஏதாவது ஓரளவு பலன் இருக்கும்.

அதனால் செய்வது சரியாக இருக்க வேண்டும்.

ஏராளமானவை சேர்ந்திருக்கலாம் - எதுவும் போகாது.

சமர்ப்பணத்திற்கு அந்தப் பவர் உண்டு.

அந்தச் சுத்தம் இந்த நேரமிருக்குமா?

நல்லெண்ண சோதனை பலிக்கும், வெறுப்பை மீறியும் பலிக்கும்.

நல்லெண்ணம் கொடுப்பது பெரியது, பெறுவது அதைவிடப் பெரியது.

நல்லெண்ணம் வரும்பொழுது நம் தகுதிக்கு வருகிறது என நினைப்பது பெறுவதாகாது.

நல்லெண்ணத்தை நல்லெண்ணமாக ஏற்க வேண்டும்.

ஒரு நல்ல எண்ணம் எல்லாவற்றையும் மீறிப் பலிக்கும்.

தற்சமயம் ஒரு கெட்ட எண்ணம் எல்லாவற்றையும் மீறிக் கெடுக்கும்.

நேரம் வந்துவிட்டால் நேர்மை புரியும்.

அன்னையிடம் நேர்மையாக நடக்க முடியுமா?

நேர்மை பெரியது, அன்னையிடம் நேர்மை அதைவிடப் பெரியது.

✡ **மனிதன் அதிர்ஷ்டத்தை விட்டு விலகுவான், தரித்திரத்தின் மீதுள்ள பிடியை விடமாட்டான். (Taste of Ignorance) அஞ்ஞான ருசி என்கிறார் பகவான்.**

- தரித்திரம், குதர்க்கம், மட்டம், குத்தல், இருப்பது, பொறாமை ஆகியவற்றை நாம் உணர்கிறோம், அறிவதில்லை, ஆராய்ச்சி செய்வதில்லை. பண்பு வளர்ந்தால்தான் அவை வளரும். Rival என்பதற்கும் enemy என்பதற்கும் எதிரி என்றே தமிழில் கூறுகிறோம். போட்டியிடுபவன் ஒருவன், அழிக்க முயல்பவன் அடுத்தவன்.
- மனம் வளர்ந்தால்தான் சொல் வளரும். சொல் நயமாக நளினமாக வளர்ந்திருப்பது பண்பு வளர்ந்திருப்பதைக் காட்டும். நமக்குப் பொறாமை, போட்டி தெரியும். அவை மேற்கொண்டு விவரமாக வெளிப்படவில்லை. பொறாமை என்பது எத்தனை வகை? இலாபம், வெற்றி, காதல், அன்பு, பிரபலம், செல்வாக்கு என்பவற்றுள் ஏற்படும் எல்லாவற்றையும் நாம் பொறாமை என்ற ஒரே சொல்லால் குறிக்கிறோம். அவர்கட்குப் பொறாமைப்படுவது மட்டம். எனக்குப் பொறாமையில்லை என அதிகம் பேர் சொல்லமாட்டார்கள். ஏனெனில், பாராட்டுதல், உயிரை விடுவது, பெண்மையின் இனிமை, ஆண்மையின் உயர்வு, போற்றுதல் என்பவற்றைப் பொறாமையிலிருந்து நடைமுறையில் பிரித்து உணரும் பக்குவம் அவர்கட்குண்டு, பற்று, பிரியம், பாசம், வேகம், கவர்ச்சி, ஆழ்ந்த பற்று, நாட்பட வாராது என ஏராளமான பொருள் மாறும் சொற்கள் உண்டு. அதனால் காதலில் பொறாமை என்பதை preciseஆக உணர்வில் பிரித்து, சொல்லால் குறிப்பிட ஆங்கிலத்தில் முடியும். தமிழிலும் பல இடங்களில் சூட்சுமம், நுணுக்கம் என்பன போன்ற சொற்கள் பயன்படுகின்றன. இரண்டும் கலந்து எழுவது சிறப்பாக இருக்கும்.
- *அஞ்ஞான ருசி* அது போன்ற சொல். அதை விளக்க ஒரு முழு கட்டுரை எழுத வேண்டும். அதன் சூட்சும இரகஸ்யம்: *பற்று, பாசமாகி, இலட்சியமாக தரித்திரத்தை அனுபவிக்கும் வினோதம் அருள் கண்ணில் படாமல் விலக்குகிறது.*

✡ **அஞ்ஞானம் ருசிக்கும்**

- உள்ளதை ஆழ்ந்து உணர்ந்து ரசிப்பவன் அதையே உலகம் என அறிவான்.
- அனுபவித்து அறிவது அறிவுடைமை என்றால், அறியாமையை அனுபவிப்பவன் அதையே அறிவு எனக் கொள்கிறான்.
- கட்டுப்பெட்டி, மடிசஞ்சி, 1900 முதல் ஆரம்பித்த பொழுது மாறியவரைக் கண்டு மாறாதவர் மனம் புழுங்கினர். நல்லதை விட்டு கெட்டதை நாடுவதாக நினைத்தனர்.
- வெளியூர் சம்பந்தம், புதிய பயிர், ஆங்கிலப் படிப்பு (நீச பாஷை), ஷர்ட் போடுவது, கிராப் வெட்டிக் கொள்வது, வெளியூர்ப் பயணம் பாவமாக கருதி மக்கள் மனம் புண்பட்டனர்.
- இன்று,
  - செலவு செய்தால் பணம் பெருகும் என்பது கசக்கிறது.
  - சுப முகூர்த்தம், நல்ல நேரம், நல்ல சகுனம், 'துடைக்காதே' போன்ற பரம்பரை பழக்கங்கள் நம்மை அதிர்ஷ்டத்திலிருந்து விலக்கும் என அறிய

முடிவதில்லை.

- சம்பளத்திற்கு வேலைக்குப் போனால் பரம்பரை தரித்திரத்தை உறுதி செய்வதாக எவரும் நினைப்பதில்லை. அதை அதிர்ஷ்டம் எனக் கருதுகிறார்கள்.
- டாக்டர் வியாதியை உற்பத்தி செய்து பிறகு குணப்படுத்துகிறார் என்பது பகவான் கூறுவதை காதால் கேட்டுக் கொள்ளவும் முடிவதில்லை.
- வலிய பிறருக்கு உதவி செய்வதைப் போன்ற பரந்த மனப்பான்மையில்லை என்பது சமூகம் முடிவாக அறிந்தது.

  *அது பெறுபவருக்கோ, செய்பவருக்கோ பலன் தாராது. ஊறு செய்யும் என்பதை நம்ப முடியாமல் கேட்டுக் கொள்கிறோம்.*
- பட்டம் பெற்றால் அதன் பிறகு அறிவு வரும் வாயில் நிரந்தரமாகத் தடையாகும் என்பதை எடுத்துச் சொல்ல உலகில் ஒரு இடமும் இருப்பதாகத் தெரியவில்லை.
- பாசம் அன்பிற்குத் தடை என்பதை யாராவது ஏற்பாரா?

  பாசம் விலங்கு போன்ற உடல் உணர்ச்சி.

  அன்பு அறிவுபூர்வமான உயர்ந்த உணர்ச்சி.

  பாசம் உள்ளவரை அன்பு பிறக்காது என்பதை உயர்ந்தோர் அறிவர்.

  உலகம் ஏற்குமா?

  பாசம் என்ற அஞ்ஞானம் ருசிக்கிறது.

  பட்டம் என்ற அறியாமை பலிக்கிறது.

  உத்தியோகம் மனிதனை உயர்த்துகிறது என்பது



உலகம் ஏற்பது.

இது பரிதாபத்திற்குரிய மனப்பான்மை என்பதை மறந்து உத்தியோகம் உணர்வின் ஆழத்தில் இனிக்கிறது.

- மனிதன் ஆதி நாளிலிருந்து மூட நம்பிக்கைகளால் இதுவரை முன்னேறினான்.

  அதை உலகம் ஏற்கும்.

  இன்று அதிகபட்ச மூட நம்பிக்கைக்கு ஆளானவர்கள் விஞ்ஞானிகள்.

  அவர்களே உலகை நடத்துபவர்கள்.

  அவர்கள் வெற்றி டெக்னாலஜியால் வந்தது. விஞ்ஞானத்தால் வரவில்லை.

  பகவான் அவர்களை நோக்கி, "உங்கள் கூற்றுப்படி ஷேக்ஸ்பியரை விட விருந்து உயர்ந்தது என்றாகிறது. ஏற்கலாமா?" எனக் கேட்கிறார்.

  பேரிலக்கியங்களை எழுதியவர்களை விஞ்ஞானம் இன்று ஏற்கவில்லை.

  அவற்றை எழுதியது மனமில்லை, அறிவு, மூளையெழுதியது, மூளையில் செயல்படும் இராசயனப் பொருள்களின் பலன் என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

*அறிவை அவர்கள் மறுக்கிறார்கள்.*
*ஆத்மா இல்லை என்கின்றனர்.*
*நமக்கு அவர்களே இன்று தலைவர்கள்.*

***விஞ்ஞானியின் அறியாமை இன்று உலகுக்கு ருசிக்கிறது.***

*இது பரிதாபமான நிலை என்கிறார் பகவான்.*

*தொடரும்....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தமிழ் என்பது வெறும் மொழியில்லை. அது இனிமை என்பது மொழியின் வாயிலாக மொழியும் பண்பு. அப்பண்பு இனிமையாக வெளிப்படும் மொழியே தமிழ் எனப்படும்.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நாம் இயற்கை; உள்ளே இருளாக இருக்கிறோம். அன்னையை அழைத்தால் உள்ளே ஒளி தெரிகிறது; அது ஜீவன். சமர்ப்பணம் உச்சமாக இருக்கும்பொழுது ஒரு கரணத்துள்ளிருந்து - மனம் முதலியவை - ஒளி எழுவது பிரகிருதியின் ஜீவன்; வளரும் ஆன்மா; சைத்தியப்புருஷன்.



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

N. அசோகன்

31. அறியாமை: படைப்பில் இருக்கின்ற அடிப்படை ஒற்றுமையை உணராத நிலையை அறியாமை என்கிறோம்.

32. அகம்பாவம்: தான் தனித்து இருப்பதாக நம்முடைய அறிவு தவறாக நினைப்பதை அகம்பாவம் என்கிறோம்.

33. இறப்பு: ஆன்மாவின் தேவைகளுக்கு ஏற்றபடி உடம்பு செயல்படாத பொழுது உயிர் உடம்பை விட்டு அகல்வதை இறப்பு என்கிறோம்.

34. வளைந்து கொடுக்கும் தன்மை: இறைவனின் திருவுள்ளத்திற்கு ஏற்றபடி நம் பர்ஸனாலிட்டியின் மாற்றிக் கொள்ளும் திறனை வளைந்து கொடுத்தல் என்கிறோம்.

35. பரிசுத்தம்: வெளியே தெரிகின்ற சுத்தத்திற்கு நிகரான சுத்தம் மனநிலையில் இருந்தால் அதை பரிசுத்தம் என்கிறோம்.

36. வாழ்வின் எதிரொலி: ஒருவருடைய உள்மனநிலையின் பிரதிபலிப்பாக வெளிவாழ்க்கை வழங்கும் Responseஐ வாழ்வின் எதிரொலி என்கிறோம்.

37. ஆழ்மனது: நம்முடைய பர்ஸனாலிட்டியின் ஆழத்தில் நம் விழிப்புணர்வை தாண்டிய நிலைகளும் நம் விழிப்புணர்வுக்கு கீழ் இருக்கும் நிலைகளும் இணைகின்ற இடத்தை ஆழ்மனது என்கிறோம். இந்த ஆழ்மனதில்தான் நம்முடைய சைத்திய

ஜீவன் ஆழ்மனக் குகையில் இருப்பதாக பகவான் சொல்கிறார்.

38. சைத்தியப்: புருஷன் — பரிணாம வளர்ச்சியில் பங்கேற்கும் நம் ஜீவாத்மாவினுடைய பிரதிநிதிதான் சைத்தியப் புருஷன்.

39. பெரும்: கடவுள்கள் — Overmind என்ற நிலையில் உறைகின்ற பரிணாம வளர்ச்சி இல்லாத கடவுள்களை நாம் பெருங்கடவுள்கள் என்று வர்ணிக்கின்றோம்.

40. அசுரர்கள்: — இறைவனுக்கு உதவியாக படைப்பில் ஒத்துழைக்க உண்டான தெய்வீகப் பிறவிகள் குணம் கெட்டு இறைவனை எதிர்க்க முனைந்த பொழுது அவர்கள் அசுரப் பிறவிகளாக மாறினார்கள்.

*தொடரும்.....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சத்தியஜீவியம் என்பது சத்தியத்தின் ஜீவியம்.

சத்தியஜீவியம் சித்-சக்தி.

சத்தியஜீவியம் சச்சிதானந்தத்தின் சுபாவம்.

சத்தியம், ரிதம், பிருஹத் என்பது சத்தியஜீவியம்.

சத்தியஜீவியம் என்பது சத்திய சக்தி.

சத்தியஜீவியம் காலத்தைக் கடந்தது.

சத்தியஜீவியம் இரண்டாகப் பிரிந்து மனம் ஏற்படுகிறது.

சத்தியஜீவியம் காரண தேகம், பிரபஞ்சம்.





## P.128 Smiling like a new-born child at love and hope

### பிறந்த குழந்தையின் பிழையற்ற புன்னகையின் அன்பும் ஆதரவும்

- ☆ இறைவனின் எண்ணிறந்த சக்தியைத் தன் சுபாவத்தில் ஏற்றாள்,
- ☆ அவளுடைய மனித இதயத்தில் திருவுள்ளத்தை அமர்த்தினாள்,
- ☆ ஒளிமயமான அவளிதயம் வழிகாட்டியாக எவரையும் தேடவில்லை:
- ☆ இறைவனின் சுவடான அவள் நடை தளர்ச்சியால் கறைபடவில்லை,
- ☆ இரவின் இருள் வந்து கண்ணைக் குருடாக்கவில்லை.
- ☆ எதிர்க்கும் வேலிக்கு வேலை தரப்படவில்லை;
- ☆ செயல் தானே சிறந்து மிளிரும் மகிழ்ச்சி.
- ☆ குணம் விசேஷமாகி மறந்த அவள் நிலை
- ☆ மனத்தின் ஆர்ப்பாட்டம் எழுப்பும் வண்ணச்சிறப்பு,
- ☆ இறைவன் எழும் வாழ்வும் மகிமை நிறைந்த கனவுகளும்,
- ☆ எண்ணற்ற ரூபமெழுப்பும் மந்திர மாயம்
- ☆ சிருஷ்டியின் இனிய அலைகள் தேடும் புது ரூபங்கள்,
- ☆ அற்புத நடனத்தின் ஆச்சரியத்தைக் கூட்டிய சுருதி,

☆ உடலை உணர்ந்து ஊடாடி அனுபவிக்கும் தேவதையின் ஆனந்தம்,

☆ மது எழுப்பும் சிருஷ்டியின் பூரிப்பு.

☆ ஆனந்த லோகத்தின் அழைப்பைக் கேட்டுணர்ந்தான்,

☆ அதில் கலந்து அனுபவிக்கும் கதவைக் காணவில்லை;

☆ எழுந்த பிளவை இணைக்கும் பாலமில்லை.

☆ ஆத்மாவைச் சூழ்ந்த இருளான வாயு மண்டலம்

☆ அமைதியற்ற வாழ்வின் பிம்பம் பிடிபடும் முடிச்சு.

☆ ஏங்கும் மனமும், தவிக்கும் உணர்வும் ஏதும் பயனில்லை,

☆ வருத்தமான எண்ணம் தரும் வாடிய அனுபவம்

☆ கவலையும், வருத்தமும், உறக்கமும் திரையிடும் திருஷ்டி

☆ அனைத்தும் ஆர்வமான கனவாகப் பிரகாசிக்கும்

☆ உழலும் உலகிடை உறையும் அவன் சுபாவம்

☆ எட்டியுள்ள இதயம் ஏற்கும் கருத்து.

☆ லோக வேதனையின் சாயலில் நடை பயிலும் நளினம்,

☆ இறைவனின் அரவணைப்பை அவன் பெற்றிருந்தபோதிலும்,

☆ நின்ற இடமெல்லாம் இரவின் நிலையெனக் கண்டு.

☆ உலகத்தின் கவலை உணர்த்துவதை அறியும் நிலை

☆ கனத்த அச்சில் வார்க்கப்பட்ட உடலும் உயிரும்,

☆ மகிழ்வால் மலரும் மகிழ்ச்சி, ஒளியால் மிளிரும் ஜோதி.

☆ நினைவும் உணர்வும் நித்திய சோதனை

☆ இன்பமும் துன்பமும் இணைந்து எழும் முதலசைவு

❃❃❃



# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே*

ஸ்ரீ அன்னை ஸ்ரீ பகவான் அவர்களின் பொற்பாத கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்து அநேக கோடி நமஸ்காரங்களுடன் இதை எனது அனுபவ கடிதமாக எழுதுகிறேன். நான் இருப்பது நெய்வேலி நகரம். எனக்கு சொந்தமான plot ஒரு சிறிய அளவு அதாவது ½ ground நிலம் சேலத்திலுள்ளது. இது சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு எனது தகப்பனார் எனக்கு மிகச்சிறிய தொகையாகிய ரூ.20,000க்கு வாங்கிக் கொடுத்தது. அதை கடந்த 7, 8 ஆண்டுகளாக விற்றுவிட வேண்டுமென தீவிரமாக ஏற்பாடு செய்தேன். அதை எனக்கு விற்றவரே அதன் அருகாமையில் அடுத்த plotல் வசிப்பதால் மீண்டும் தானே வாங்கிக் கொள்ளும் அபிப்பிராயத்தில், என் நோக்கம் தெரிந்து கொண்டு மிக மிக மலிவான - மோசமான விலைக்கே - கொடுத்துவிட வேண்டும் என்று அடாவடியாக பேசி வந்தார். மேலும் ஊர் நிலவர விலைக்கு பாதி விலைகூட இல்லாததால் எனக்கு இஷ்டமில்லாமல் இருந்தது. Broker மூலம் பேசியும் யார் அந்த இடத்தை பார்ப்பதற்கு வந்தாலும் எந்த பேச்சும் பேசுவதற்கு இடம் கொடுக்காமல் தடுத்து வந்தார். நாள் கடந்ததே தவிர எனக்கு எந்த வேலையும் நடக்கவில்லை. முடிவாக நான் ஸ்ரீ அன்னை திருவுளப்படி நிறைவேறட்டும் என்று இருந்துவிட்டேன். ஒரு கட்டத்தில் சேலத்திலுள்ள எனது சகோதரரும், அவரது மனைவியும் இதை சவாலாக எடுத்துக் கொண்டு நல்ல விலைக்கே கொடுப்பதாக broker மூலம் ஏற்பாடு செய்து வந்தார்கள். கடந்த பிப்ரவரி மாதம் ஒருவர் எந்த பேச்சுவார்த்தை வந்தாலும் தான் பார்த்துக் கொள்வதாக முன்வந்து நல்ல விலைக்கு அதாவது சதுர அடி ரூ.425 என முடித்து advanceசும் கொடுத்துவிட்டு சென்றார். எந்த இடையூறு வந்தாலும் அன்னையின் அருள் நம் பக்கம் உள்ளது

என்ற நம்பிக்கைதான் பரிபூரணமாக இருந்தது. இந்த மாதம் 11.03.2011ல் registration வைத்துக்கொள்வதாக முடிவாகியது. ரிஜிஸ்ட்ரேஷனும் நல்ல முறையில் முடிந்து கடைசி நேரம் வரை எந்த கலாட்டாவும் இல்லாமல், ஒரு தடங்கலும் இல்லாமல், எந்த சச்சரவும் இல்லாமல், தொகையை அதாவது ரூ.5,50,000த்தை வாங்கி கொடுத்துவிட்டார்கள். விஷயம் நல்லபடி நிறைவேறினது அன்னையின் அருள் எல்லா இடத்திலும் நின்று நடத்திக் கொடுத்து நிறைவேற்றிவிட்டது. ஸ்ரீ அன்னைக்கும், ஸ்ரீ பகவானுக்கும் மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மற்றபடி இதில் முழுமூச்சாக பிரயாசைப்பட்டு நிறைவேற்றிய எனது சகோதரருக்கும், அவர் மனைவிக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். திரு. அப்பா அவர்களின் ஆசியும், திரு. அசோகன் அண்ணன் அவர்களின் ஆசியும் கவசமாக இருந்து எங்கள் குடும்பத்தை காப்பதற்கு இதற்கு மேல் உதாரணம் உண்டோ?

நன்றி! நன்றி! நன்றி!

-- விஜயா கபிலன், நெய்வேலி

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

புரிந்து படிப்பது முதல் நிலை.

ஞானத்தின் தர்க்கத் தகுதி அடுத்தது.

ஆன்மீக நிறைவைத் தரும் ஞானம் அதன் பின்னுள்ளது.

பகவானுடைய பொன்மயமான உருவம் அவரது சத்தியஜீவிய அனுபவமாக அதன்பின் அமைகிறது.





# லைப் டிவைன்

கர்மயோகி

## Chapter XXI. The Ascent of Life

### Page 198, Para 1

Mind is divided, mortal. It is the parent of limitation and ignorance and the dualities. It is only a dark figure of the Supermind. Supermind is the self-luminous divine consciousness. Our cosmos commences with the apparent negation of itself. Mind is the result. As we have already seen this, so also Life is only a dark figure of the divine superconscient force. Its highest terms are immortality, satisfied delight and omnipotence. Life emerges in our material universe. It is an energy of the dividing Mind subconscious, submerged, imprisoned in Matter, the parent of death, hunger, incapacity. We are a part of the great cosmic processus. The relation fixes the nature of that processus. It determines the first, the middle and the ultimate terms of our evolution. The first terms of Life are division and an impotence. It is a force-driven subconscious will. It is not apparent as well. It is a dumb urge of physical energy. It is an impotence of an inert subjection to the mechanical forces. They govern the

interchange. The interchange is between the form and its environment. This is inconscience. This is blind energy. It is potent Energy. They are the type of the material universe. The physical scientist sees it so. And this view of his extends and turns into the whole of basic existence. It is the consciousness of Matter. It is the accomplished type of material living. But there comes a new equipoise. A new set of terms intervenes. It increases in proportion as Life delivers itself out of this form. And it begins to evolve towards conscious Mind. The middle terms of Life are death and mutual devouring, hunger and conscious desire. It is the sense of a limited room. Its capacity and the struggle increase to expand, to conquer and to possess. These three terms are the basis of the status of evolution. It is Darwin's theory which first made it plain to human knowledge. For the phenomenon of death involves in itself a struggle to survive. Death is only a negative term in which Life hides from itself. It tempts its own positive being to seek for immortality. The phenomenon of hunger and desire involves a struggle towards a status of satisfaction and security. Desire is only a stimulus by which Life tempts its own positive being to rise out of negation. It is one of unfulfilled hunger. It is towards the full possession of the delight of existence. The phenomenon of limited capacity involves a struggle towards expansion. It is a mastery and a possession, a possession of the self. It is the conquest of the environment. Similarly, limitation and defect are only the negation by which Life tempts its own positive being to seek for perfection. It is eternally capable of such perfection. The struggle for life is not only a struggle to survive. It is also a struggle for possession and perfection. Only by taking hold



of the environment can survival be secured. It is by self-adaptation or by adapting it to oneself. It is done by accepting or conciliating it. It can also be by conquering and changing it. A continuous permanence, a lasting survival is the goal. It is only by a greater and greater perfection it can be assured. This is the truth of the Darwinian formula of the survival of the fittest.

## Page 199, Para 2

The scientific mind sought to extend to Life the mechanical principle. It is proper to the existence and concealed consciousness in Matter. It does not see that a new principle has entered. Its very reason of being is to subject to itself the mechanical. The principle of Life is too largely aggressive. It is the vital selfishness of the individual. It is the instinct and process of self-preservation. It is self-assertion and aggressive living. These two first states of Life contain in themselves the seeds of a new principle. There is another state too. It must increase in proportion as Mind evolves out of Matter. It does so through the vital formula. Thus it evolves into its own law. And further Mind evolves upwards towards Supermind and Spirit. That must change all things when Life evolves upwards towards Mind. The struggle for survival is the impulse towards permanence. It is contradicted by the law of death. The individual life is compelled and used to secure permanence. It is done for the race rather than for itself. But this it cannot do without the cooperation with others. The principle of cooperation and mutual help is the seed out of which flowers the principle of love. The desire for others, the desire of the wife, the child, the friend and helper, the associated group,

the practice of association are the aspects of mutual help. At first love may be only an extended selfishness. It may persist and dominate. It still does persist and dominate in higher stages of the evolution. The real truth is the natural individual is a minor term of being. It exists by the universal. The evolving mind finds it more and more. As it has the experience of love and life, it can perceive the truth. This is an important discovery. It determines his destiny. At this stage, Mind can see there is something beyond itself. From that moment the course of his evolution is inevitably predetermined. It is a course towards something superior, towards Spirit, towards Supermind, towards Supermanhood.

## Page 200, Para 3

Life is predestined by its own nature, to a third status. It is a third set of terms of its self-expression. Let us examine this ascent of life. Here we shall see the last terms of its actual evolution. We have called its terms its third status. It must necessarily be in appearance the very contradiction of its first conditions. It is also its opposite. In fact, it is the very fulfillment of it. Also it is its transfiguration. Life starts with the extreme divisions. They are the rigid forms of Matter. The atom is the very type of this rigid division. It is the basis of all material form. The atom stands apart from all others. It does so even in its union with them. The atom rejects death and dissolution under any ordinary force. It is the physical type of the separate ego. Thus it defines its existence against the principle of fusion in Nature. But unity is as strong a principle in Nature as division. It is indeed the master principle. Division is only a subordinate term of unity. Every divided



form must therefore subordinate itself in one fashion or another. It is by mechanical necessity, by compulsion, by assent or inducement. Nature has her own ends. Nature principally wants to have a firm basis for her combinations. It needs a fixed seed of forms. Therefore nature allows the atom to resist the process of fusion by dissolution. Nature compels the atom to subserve the process of fusion by aggregation. The atom is its first aggregate. It is also the first basis of aggregate unities.

## Page 201, Para 4

The second status of Life is vitality. Life soon reaches there. The contrary phenomenon takes the lead here. Therefore the physical basis of the vital ego dissolves. It is obliged to consent to dissolution. Its constituents are broken up. The elements of one life are used to enter the elements of other lives. Now we have the science of physical life. It is also the science of existence of Matter. It is sound. We can, in future, have a science of mental life. It is also the science of spiritual existence. The above law reigns to a great extent in Nature. That can be recognized only when the higher science is born. Man enters into the existence of others. Our elements of the physical body do so. Even those of the subtler vital being do so. It is true of our life-energy, desire-energy, our powers, strivings, and passions. They do so during our life and after life. We can see it broadly. An ancient knowledge knows this and tells it to us. We have a vital and physical frame. After death these too dissolve. They lend themselves to the constitution of other vital bodies. During our life, our life energies enter others. They do so constantly. They continually mix with the energies of others. We have a mental life. Other

thinking creatures too have mental lives. A similar law governs them too. The shock of mind upon mind is constant. It leads to constant dissolution and dispersion. They at once reconstruct themselves. It results in constant interchange and fusion of elements. Interchange, intermixture and fusion are there at all times. It is the process of life, a law of existence.

## Page 202, Para 5

We have then two principles of Life. One is the necessity or the will of the separative ego to survive. It must survive distinctly and guard its identity. The other principle is the compulsion imposed upon it by Nature. It is a compulsion to fuse with others. In the physical world she lays stress on the former impulse. For she needs to create stable separate forms. Nature is an incessant flux and motion of Energy. Also it is of unity of the infinite. It is a problem here to create a separate entity and maintain it. In the atomic life the individual form persists. It is the basis. It secures by aggregation with others. It is more or less a prolonged existence of aggregate forms. It shall be the basis of mental and vital individualizations. Soon Nature acquires sufficient firmness in this respect. It is for safe conduct of her ulterior operations. At once she reverses the process. The individual form perishes. The aggregate life profits by the elements of the dissolved form. This is not the last stage. It can only be reached when the two are harmonized. It occurs when the individual persists in his consciousness and yet fuses himself with others. He does so without disturbing the preservative equilibrium. Nor does he interrupt the survival.



## Page 202, Para 6

The above are the terms of the problem. They presuppose the full emergence of Mind. Vitality can be without conscious Mind. At such a state there can be no equation. There can only be a temporary equilibrium. It will be unstable. It will end in the death of the body. The individual will then dissolve. The elements will be dispersed into universality. Physical Life has a nature. It forbids the formation of individuality. Individuality can persist only when it has the same power of persistence as conscious Mind. Individuality is composed of atoms that persist. The mental being has the psychic in it. It is the supporting nodus. It expresses or begins to express the secret soul. It has the power of linking the past to the future. The past, present and future are in a stream of continuity. This capacity to link has the power of persistence. When a man dies, the form breaks. So the memory is lost. But the mental being is not destroyed. The mental being may be a bridge over the gap created by the break of memory. It occurs by death and rebirth. Even now the mental being is endowed with the mass of the past as well as that of the future. Still it is imperfect. It is not mind pure, but embodied mind. It is an awareness beyond the life of the body. He becomes aware of an individual past. He remembers the individual lives that have created his. He is a development of those lives. He is a modified reproduction of future individual life. His own life is creating it out of itself. He is also conscious of an aggregate past life and future. His own continuity runs through them all as one of its fibres. This is evident to physical Science. They call it heredity. It becomes evident to the developing soul behind the mental being. It is understood as the

persistent personality. The mental being expresses the soul-consciousness, is the nodus of the persistent individual. It is also the nodus of the persistent aggregate life. In him the harmony and union are possible.

## Page 203, Para 7

This new relation has a power. It then becomes a governing principle of the development. It is into the third status of life. This has a secret principle. It is the emerging summit of this type. It comes out of association with love. The individuality is to be consciously preserved. Necessity and interchange are to be consciously accepted. It leads to self-giving and fusion with other individuals. It is necessary for the working of the principle of love. In case either is abolished, the working of love ceases. This is true whatever may take place. The mental being has an impulse. It is indeed an idea. It is a development beyond the third status of Life. Fulfilment of love is possible by entire self-immolation. It may have an illusion of self-annihilation. Of course it is an idea of the mental being. Life is a struggle. It is a condition in which we rise progressively. It takes us beyond the struggle for life. It is by mutual devouring. The aim is the struggle for the fittest by the struggle. The third status is such a condition. There is more and more a struggle by mutual help. It is a self-perfectioning by mutual adaptation. It uses interchange and fusion. Life is a self-affirmation of the being. It is a development and survival of the ego. But it is a being that has need of the other beings. It is an ego that seeks to meet other egos. They are to be included in their life. The law of association is developed by individuals. It is done by the



aggregates too. It is the Law of love of common help. It is the law of kindliness, affection, comradeship, unity. They harmonise most successfully survival and mutual self-giving. The aggregate increasing the individual and the individual aggregate is a phenomenon. Also it is the increasing of the individual by the individual and the aggregate by the aggregate. It is by mutual self-giving of interchange. This is the tertiary status of evolution. They will be the fittest here.

## Page 204, Para 8

The predominance of Mind is progressively increasing. The above development is significant of this predominance. Mind imposes its own law on existence. Mind does so more and more on the material existence. Mind has a greater subtlety. It need not devour in order to assimilate. Nor does it need it to progress or grow. Rather, the more it gives, the more it receives and grows. The more it fuses itself into others, the more it fuses others into itself. Thus it increases the scope of its being. Physical life exhausts itself by too much giving. It ruins physical life to devour too much. Mind suffers the same limitation if it leans too much towards the law of Matter. The suffering is in proportion. Mind can grow into its own law. In that proportion, it tends to overcome this limitation. In proportion to Mind's overcoming the material limitation, giving and receiving become one. Manifest Sachchidananda has a divine law. It is the law of unity in differentiation. It is a conscious unity. Mind grows towards this rule in its upward ascent.

## Page 204, Para 9

Hunger and desire are the first seeds of conscious mind. This is the secondary status. It is the second term of the original status of life. It is subconscious will. This grows into the third status of life. It is by the principle of association. It is by the growth of love. It does not abolish the law of desire. Rather, it is transformed into love and thus fulfilled by it. Love has a nature. It is the desire to give oneself to others. Also it desires to receive others in exchange. It is a commerce between being and being. Physical life does not desire to give itself. It only desires to receive. It is true it is compelled to give itself. It is a life which only receives. It does not give. Therefore it must become barren, wither and perish. Is it possible for such a life in its entirety. Is it possible here, in this world? Really it is compelled, not willing. It obeys the subconscious impulse of Nature. It does not consciously share in it. Love then intervenes. Its self-giving at first is mechanical. It preserves that character. This is the subconscious will in the atom. Love itself at first obeys the law of hunger. It enjoys receiving. It exacts from others. It does not surrender and give to others. This it admits chiefly as a price for getting. It is a price for the thing it desires. Here it has not yet attained its true nature. Its true law is to establish an equal commerce. In it, joy of giving equals the joy of receiving. In the end the joy of giving tends to become greater. Then it shoots beyond itself. It is under the pressure of the psychic flame. It is to attain the utter unity and its fulfillment. Then it realises a greater truth. What was till then not-self is now the greater, dearer self. It is greater than its individuality. The law of love has its life-origin. There



it is an impulse. It is an impulse to realize and fulfil oneself in others. It is fulfilled by others. It is enriched by enriching. It possesses and allows itself to be possessed. One does not possess without being possessed utterly.

## Page 205, Para 10

Life has a first status. Its capacity is inert atomic existence. It possesses itself. It is subjection to the material individual to the not-self. Then comes the secondary status. It is conscious of its limitation. It struggles to possess both self and not-self. It tries to master them. This is the second status. The development of the third status begins here. It brings a transformation of the original terms. It is a fulfillment and a harmony. They repeat the terms but appear to contradict them. A recognition of the not-self as a greater self arises. It comes through association and a love of recognition. It consciously accepts a submission to its law. It is a need. It fulfils the increasing impulse of aggregate life. The impulse is to absorb the individual. There is another possession. It is by the individual of the life of others as his own. It covers all that it has to give him as his own. It fulfills the opposite impulse of individual possession. This is a relation of mutuality. It is between the individual and the world he lives in. It is established between individual and individual. It is also between aggregates and aggregates. It cannot be expressed or complete. Nor it can be secure unless the same relation is established between the individual and the aggregate. The basic problem lies in the opposition of Life to Matter. Man tries for harmonisation. He loves self-affirmation and freedom. By these he possesses himself. He creates a balance of the

opposites – individual and aggregate – by association with love. It goes with fraternity and comradeship. Thus he gives himself to others in the aggregate. These are the lines predetermined. It is inevitable. It issues out of the original problem of Nature. It is the very problem of Life. The resolution is attempted by a higher principle of Mind. It alone can find the road to harmony. Really the harmony itself lies in a Power beyond.

## Page 206, para 11

Mind is only an inferior term of That. First it is an instrument for descent into form. It also descends into individuality. Secondly Mind is an instrument for reascension into reality. The form embodies the reality and the individuality represents. So, the goal lies beyond Mind in That. That is the end of the road. The data we started with tells us that much. There is the association with love. Interchange and accommodation are there. The laws of life and Mind are there. The perfect solution is not to be reached by any of these methods. Nor will the law of the heart help. It must come from the fourth status of life. Here the eternal unity of the many is realized by the spirit. Here the conscious foundation of all the operations of life is laid. They are not in the divisions of the body. Nor are they in the passions and hunger of the vitality. Even the groupings of the imperfect harmonies of the mind do not have it. We do not find it in the combinations of all these. It is there in the unity and freedom of the Spirit.

❀❀❀



# P & Pஇல் உள்ள புதுமைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

N. அசோகன்

இப்பொழுது இக்கதையில் உள்ள முக்கிய கதாப்பாத்திரங்கள் வெளிப்படுத்தி இருக்கின்ற புதுமையான மனோபாவங்கள் மற்றும் புதுமையான செயல்பாடுகளையும் பார்ப்போம்.

**டார்சி:** டார்சியினுடைய personalityயில் புதிய மற்றும் வழக்கத்திற்கு மாறான பரிமாணங்கள் காணப்படுகின்றன. உயர்ந்த சமூக அந்தஸ்தும், மிகப்பெரிய சொத்தும் பணவசதியும் கொண்ட டார்சி போன்ற ஒரு பிரபு வம்சத்தைச் சேர்ந்த இளைஞன் லிசி போன்ற சாதாரண குடும்பத்துப் பெண்ணை மணக்க விரும்புவது வழக்கமான சமூக நடைமுறைக்கு மாறான ஒரு புதிய செயல்பாடாகும். ஆனால் தமிழ்த் திரைப்படங்களில் பணக்கார பெரிய இடத்து இளைஞர்கள் சாதாரண ஏழை குடும்பத்து பெண்கள்மேல் விருப்பம் கொண்டு பழக முன்வருவது போன்று நிறைய காட்சிகள் வந்துவிட்டன என்பதால் இது நமக்கு அவ்வளவு புதியதாகத் தெரியாமல் போகலாம். ஆனால் அன்றைக்கு அவன் செய்தது அந்தக் காலத்து சமூக சூழ்நிலைக்குப் புதியது என்பதைதான் நாம் பார்க்க வேண்டுமே தவிர இன்றைய திரைப்படக் காட்சிகளை வைத்து நாம் இது ஒன்றும் புதிதல்ல என்று சொல்லக் கூடாது. ஆனால் அவள் அவனை மறுத்த பிறகும் அவளுடைய அன்பையும், பாராட்டையும் திரும்பப் பெறுவதற்கு அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் அவன் கையாண்ட அணுகுமுறைகளும் முற்றிலும் வழக்கத்திற்கு மாறான அணுகுமுறைகளாகும். அவளைப் பார்ப்பதற்காக அவன் அந்த மெரிட்டன் கிராமத்திற்கு மீண்டும் போகவில்லை. மற்றும் திருமண proposalஐ மீண்டும் அவன் உடனே அவளுக்கு வழங்க முயற்சியும் செய்யவில்லை. தெரிந்தவர்கள் மூலமும் தூது

அனுப்பவும் இல்லை. லிடியா மற்றும் விக்காமுடைய திருமணத்தை அவன் ஏற்பாடு செய்தபொழுதுகூட இது தான் செய்த ஏற்பாடு என்று லிசிக்கு தெரிய வேண்டும் என்றுகூட அவன் முயற்சி செய்யவில்லை. எல்லாவற்றையும் கார்டினர்தான் செய்தது போலவும், தன்னுடைய ஈடுபாட்டை மிகவும் இரகசியமாக வைத்துக் கொண்டான். தான் அவளை மீண்டும் நாடுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்னும் பொழுது எப்படி அவளை அவன் தன்னுடைய இடத்திற்கே வரவழைத்தான் மற்றும் மீண்டும் proposal கொடுத்தால் ஏற்றுக் கொள்கிறேன் என்று அவளைச் சொல்ல வைத்தான் என்பதில்தான் அவனுடைய புதுமையே இருக்கிறது. இதற்குண்டான பதில் மௌன சக்தியில் இருக்கிறது. தன்னை அவளுக்குப் பிடிக்காமல் போனதற்கும், தன்னிடமிருந்து தள்ளி நிற்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியதற்கும் காரணமாக தன்னிடம் என்ன இருக்கிறது என்பதை அவன் சிந்தித்துப் பார்த்துத் தெரிந்து கொண்டான். தன்னுடைய ஆணவம், தன்னுடைய தனக்கு ஒரு நியாயம் மற்றவர்களுக்கு ஒரு நியாயம் என்ற double standards, அவனுடைய நண்பனின் பர்சனல் விஷயங்களில் அதிகமாகத் தலையிட்டது, social status மற்றும் ஜீவனில்லாத வெளிப்புறத் தோற்றங்களை அளவுக்கு அதிகமாக மதித்தது இவையெல்லாம் தன்னிடம் குறைபாடுகளாக இருக்கின்றன என்று அவன் உணர்ந்தான். இந்த இடங்களில் எல்லாம் அவன் மாறவும் முன் வந்தான். தன்னுடைய ஆணவத்தை விட்டு பணிவை வரவழைத்துக் கொண்டான். தன்னுடைய கண்ணோட்டத்தையே வலியுறுத்திக் கொண்டிருந்தவன் விட்டுவிட்டு லிசியினுடைய கண்ணோட்டத்தில் இருக்கின்ற உண்மை, பிங்கிலியினுடைய கண்ணோட்டத்தில் இருக்கின்ற உண்மைகளை ஏற்றான். தன் நண்பனான பிங்கிலியிடம் சென்று உன் திருமண விஷயத்தில் நான் இனிமேல் தலையிடமாட்டேன். நான் ஏதோ தவறாகப் புரிந்து கொண்டேன். உன் விருப்பம் போல் நீ ஜேனுக்கு proposal



கொடுக்கலாம் என்று தான் ஏற்படுத்திய தடைகளைத் தானே விலக்கிக் கொள்கிறான். மனமாற்றத்திற்கு முன்பு லிசியின் மாமாவும், மாமியும் திரு. மற்றும் திருமதி. கார்டினர் ஆகிய இருவரும் லண்டனில் Cheapside என்ற working class areaவில் இருப்பதாகக் குறை சொல்லிக் கொண்டிருந்தவன் இப்பொழுது அவர்கள் இருக்கும் இடத்தை விட்டுவிட்டு அவர்கள் ஏழைகள் என்றாலும் பண்பில் சிறந்தவர்கள் என்பதை உணர்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக பென்னட் குடும்பத்திற்கு லிடியா ஓடிப் போனதால் வந்த அவமானத்திற்குத் தான் conscious responsibility எடுத்துக் கொண்டு நடந்த தவற்றைச் சரி செய்து பரிகாரம் செய்ய தான் முன்வருவது மிகவும் புதுமையான விஷயமாகும்.

1. சாதாரணமாக இப்படி ஒரு அவமானத்தைத் தான் பட்ட பிறகு பென்னட் குடும்பத்திற்கு வந்த சிரமத்தை நீக்க வேண்டும் என்று டார்சி எந்தப் பொறுப்பையும் உணர வேண்டிய அவசியமோ மற்றும் லிடியாவைத் தேடிக் கண்டுபிடித்துக் காப்பாற்ற வேண்டும் என்ற தேவையோ அவனுக்கில்லை. ஏற்கனவே பென்னட் குடும்பம் manners இல்லாத மட்டமான குடும்பம் என்று தான் புரிந்து கொண்டிருந்ததை இந்தச் சம்பவம் மேலும் உறுதிப்படுத்துகிறது என்று அவன் எடுத்துக் கொள்ளலாம். அதே சமயத்தில் லிசியை டின்னருக்கு அழைக்க வேண்டும் என்று தனக்கு வந்த ஒரு விருப்பத்தையும் மாற்றிக் கொண்டு இனிமேலும் அவளோடும், அவள் குடும்பத்தாரோடும் தொடர்பு வைத்திருந்தால் அது தனக்கு ஒரு களங்கம் உண்டாகும் என்று நினைத்து விலகி இருக்கலாம். இப்படி ஒரு செய்தியை அவள் சொன்னவுடன் அவளை டின்னருக்கு அழைக்காமல் அப்படியே திரும்பச் சென்றிருந்தால் அவனை யாரும் குறை சொல்லியிருக்க மாட்டார்கள். ஆனால் யாரும் எதிர்பார்க்காத வகையில் நடந்த அசம்பாவிதத்திற்குத் தானும் ஒரு முக்கிய காரணம்

என்று தன் மனதில் ஏற்றுக் கொண்டு யாருக்கும் தெரியாமல் தன்னால் முடிந்த அளவிற்கு வந்த பிரச்சனையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறான். விக்காமோடு அவனுடைய தங்கை சம்பந்தப்பட்டிருப்பதால் அவன் ஒரு தப்பான பேர்வழி என்று மெரிட்டன் கிராமத்தில் எல்லோரிடமும் சொன்னால் எங்கே தன் தங்கையின் பெயரும் வெளிவந்துவிடுமோ என்று பயந்து விக்காமைப் பற்றி தனக்குத் தெரிந்ததை மூடி மறைத்ததுதான் நடந்த அசம்பாவிதத்திற்கே முழுமுதல் காரணம் என்று அவன் நினைத்தான். லிடியாவும், விக்காமும் ஓடிப்போன விஷயத்தில் பல பேர் சம்பந்தப்பட்டிருந்தாலும், நடந்த எல்லாவற்றிற்கும் தான் மட்டுமே பொறுப்பு என்பது போலவும் மற்றவர்கள் எவருக்கும் எந்தப் பொறுப்பும் இல்லை என்பது போலவும் டார்சி நடந்து கொண்டான். ஆனால் உண்மையில் லிடியாவின் பேரிலும் தவறுள்ளது, விக்காமின் பேரிலும் தவறுள்ளது. தாயார் என்ற முறையில் திருமதி. பென்னட் அவர்கள் தன் மகளைப் போய் “நன்றாக அனுபவித்துவிட்டு வா” என்று உற்சாகம் ஊட்டி அனுப்பியது திருமதி. பென்னட் செய்த ஒரு பெரிய தவறாகும். மேலும் நிறைய இளைஞர்கள் இருக்கக்கூடிய ஒரு இடத்திற்குக் காதல் வேகம் மிகுந்த தன் மகள் போகத் துடிக்கும் பொழுது அந்த இடத்தில் குடும்பத் தலைவர் என்ற முறையில் தன் அதிகாரத்தைச் செலுத்தி அவளைக் கண்டித்துத் தடுத்து நிறுத்தாமல் திரு. பென்னட் அவர்கள் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டது அவர் செய்த தவறாகும். லிசியை எடுத்துக் கொண்டால்கூட விக்காமைப் பற்றி அவளுக்கு டார்சி மூலம் ஒரு தகவல் வந்திருக்கிறது. அதை அவள் தன் தகப்பனாருக்கு அந்த நேரம் சொல்லியிருந்தால் அவர் உஷாராகி, லிடியா போவதைத் தடுத்திருப்பார். பின்னால் நடந்த விபரீதத்தை இவ்வகையில் தடுத்திருக்கலாம். விக்காம் மேல் அவளுக்கு இன்னமும் ஒரு



soft-corner இருந்ததால் அவள் சொல்லாமல் மறைத்தது அவளுடைய தவறு என்றாகிறது. இவ்வளவு பேரிடமும் தவறிருக்கும் பொழுது தன்னைத் தவிர வேறு யார் யார் இவ்விஷயத்தில் தவறு செய்திருக்கிறார்கள் என்று அவன் கண்டறிய முயற்சியே செய்யவில்லை. மற்றவர்கள் யாரையும் திருத்தவும் அவன் நடவடிக்கை எடுக்கவில்லை. நடந்த விபரீதத்திற்குத் தான் முழுப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு நிலைமையைச் சரி செய்ய தன்னால் என்ன செய்ய முடியுமோ அதை அவன் செய்தான். அவன் மௌனமாகத் தன்னைத் தானே திருத்திக்கொண்டான். அந்தத் திருத்தம் ஒன்றுமே செய்ய முடியாது என்று எல்லை மீறிப் போன ஒரு பிரச்சனையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ஒரு நல்ல தீர்வை கொடுத்தது. அவனையும் மீறி அவன் செய்த நல்ல உதவி லிசியின் காதுகளுக்கு எட்டி மீண்டும் proposal கொடுத்தால் ஏற்றுக் கொள்கிறேன் என்று அவளைச் சொல்ல வைத்தது. Silent willஉடைய power எவ்வளவு மகத்தானது என்று நாம் இதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். மிகவும் சிக்கலான பிரச்சனைகளில்கூட சம்பந்தப்பட்ட ஒருவர் silent willஐ மேற்கொண்டால் விரைவில் நல்ல தீர்வு வருவதை அவர் பார்க்கலாம்.

**லிசி:** டார்சி எந்தளவு புரட்சிகரமான கதாநாயகனாக செயல்பட்டானோ அதே அளவிற்குப் புரட்சிகரமாக லிசியும் தன்னளவில் செயல்பட்டிருக்கிறாள். அவளிடத்தில் என்ன புதுமையுள்ளது என்பதை நாம் இப்பொழுது பார்க்க வேண்டும். அவள் பழகிக் கொண்டிருந்த சமூகத்திலுள்ள மற்ற பெண்மணிகள் மற்றும் இளம்பெண்கள் ஆகியவர்களைவிட இவள் வேறுபட்டு தனித்து நிற்கிறாள் என்பதுதான் அவளிடம் உள்ள புதுமை. எங்கே, எப்படி வேறுபட்டு நிற்கிறாள் என்று நீங்கள் கேட்கலாம். இந்தக் கதையில் வருகின்ற மற்ற பெண் கதாப்பாத்திரங்களிடம் இல்லாத

ஒரு individualityயும் அதாவது தனித்தன்மையும், ஒரு formed personalityயும் அவளிடம் தென்படுகின்றன. Individuality என்றால் என்ன? தன் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்வது என்பதைப் பற்றி சிந்தித்துத் தனக்கென ஒரு தனிப் பாணி அமைத்துக் கொண்டு தனக்கென்று சில valuesகளையும், இலட்சியங்களையும் ஏற்றுக் கொண்டு மற்றவர்கள் அதை ஏற்கிறார்களோ, இல்லையோ தனக்குச் சரி என்று படுவதைத் தைரியமாகச் செயல்படுத்தும் திறனைத்தான் individuality என்கிறோம்.

ஜேன், ஷார்லேட் மற்றும் கரோலின் போன்ற பெண்கள் ஒரு economic security மற்றும் நல்ல பாதுகாப்பு வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் திருமணத்தை நாடினார்கள். அவளுடைய இன்னொரு சகோதரியான லிடியாவோ இதற்கும் கீழே சென்று வெறும் உடல் சுகத்திற்காக ஆண் துணையை நாடியிருக்கிறாள். ஆனால் திருமண விஷயத்தில் லிசி இப்படி economic securityயோ அல்லது உடல் சுகத்தையோ நாடியதாகத் தெரியவில்லை. தனக்குப் பிடித்தவராகவும், தன் மனதைக் கவர்ந்தவராகவும் இருக்கக்கூடிய ஒரு நபரைத் தேர்ந்தெடுத்து அவரைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று அவள் உறுதியாக நிற்கிறாள். அதாவது எதிர்கால securityகாகத் திருமணம் செய்து கொள்ளாமல் அன்பிற்காகத் திருமணம் செய்து கொள்வேன் என்று அவள் எடுக்கின்ற முடிவு மற்ற பெண்களிடமிருந்து அவளை வேறுபடுத்திக் காட்டுகிறது. தன்னைப் போன்று சில திடமான valuesகளும், இலட்சிய மனப்பான்மையும் உள்ள ஆண்மகனைத்தான் அவள் தேடினாளே தவிர நல்ல வசதியான இடம், பணமுள்ள இடம், மற்றும் ஒரு அழகான தோற்றமுள்ள இளைஞன் என்று இவற்றைப் பிரதானமாகத் தேடியதாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில் விக்காமுடைய அழகு மற்றும் இனிமையான பேச்சில் மயங்கினாள் என்றாலும் நேர்மையற்றவன் என்று தெரியும் பொழுது அவனை விட்டு விலககிறாள் என்பதையும் நாம் கருத வேண்டும். Economic securityயை அவள் பெரிதாக நினைத்திருந்தால் காலின்ஸ் proposal வழங்கும் பொழுது மறுப்பேச்சில்லாமல் ஒத்துக் கொண்டிருந்திருப்பாள். ஏனெனில் அவன் ஒரு நல்ல வேலையில், நல்ல வருமானத்துடன் இருந்தான். மேலும் அவனை மணந்து கொண்டிருந்தால் அவளுடைய சொத்தும் அவளுடைய குடும்பத்தாருடைய கையை விட்டு வெளியில் போயிருக்காது. ஆனால் காலின்ஸை அவள் நிராகரித்தாள் என்னும் பொழுது economic securityயை அவள் நாடியதாகத் தெரியவில்லை. அழகான மணமகன்தான் வேண்டுமென்று திடமாக முடிவு செய்திருந்தாள் என்றால் விக்காம் நேர்மையற்றவன், மைனர் பெண்ணோடு ஓட முயற்சி செய்தவன் என்று தெரிந்த பிறகும் அவன் மேல் இருந்த மோகம் குறையாமல் அவனுடைய தொடர்பையும் நாடியிருப்பாள். ஆனால், அவன் நேர்மையற்றவன் என்று தெரிந்த பிறகு அவள் விலகினாள் என்னும் பொழுது அழகான தோற்றத்தையும் அவள் பெரியதாகக் கருதினாள் என்று சொல்வதற்கில்லை. டார்சி தன்னைத் திருத்திக் கொண்டு gentleman என்ற சிறப்பிற்குரியவனாக தன்னை நிரூபிக்கும் பொழுதுதான் லிசி அவன் மேல் ஒரு மதிப்பும், மரியாதையும் வைத்து அன்பு காட்ட ஆரம்பிக்கிறாள். அவன் ஆணவம் மிகுந்தவனாகவும், தன் சகோதரியின் திருமண முயற்சிகளைத் தடை செய்பவனாகவும், social statusஐ வலியுறுத்துபவனாகவும் இருக்கும் பொழுது அவன் ஒரு பெரிய எஸ்டேட் மற்றும் மாளிகையுடன் வந்தாலும் அவனை இவள் மதிக்கவில்லை. அகம்பாவத்தை விட்டுவிட்டு பணிவை வரவழைத்துக் கொண்டு அவன் பொதுவாக போகவேப் பிரியப்படாத இடங்களுக்கெல்லாம் சென்று லிடியாவையும், விக்காமையும் தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் பொழுதுதான் அவளுடைய அன்பிற்கு அவன் உரியவனாகிறான்.

**இதர கதாப்பாத்திரங்கள்:** டார்சி மற்றும் லிசியைத் தவிர திரு. பென்னட், ஷார்லேட் மற்றும் கார்டினர் தம்பதிகள் போன்றவர்களும் புதுமையான மற்றும் அவர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலையில் யாரும் எதிர்பார்க்க முடியாத குண விசேஷங்களையும் வெளிப்படுத்துகிறார்கள். திரு. பென்னட்டை எடுத்துக் கொண்டால் பல வருடங்களாக மனைவிக்கு அடங்கிய கணவராகவும், பொறுப்பற்றக் குடும்பத் தலைவராகவும் நடந்து கொண்டுள்ளார். அவர்கள் நாட்டில் அந்தக் காலகட்டத்தில் வீட்டில் பல பெண்கள் இருந்தால் பெரிய பெண்ணை மட்டும்தான் டான்ஸ், பார்ட்டி என்றெல்லாம் அனுப்புவார்களாம். அவளுக்குத் திருமணம் நிச்சயம் ஆகும்வரை மற்ற பெண்களை வீட்டிலேயே நிறுத்தி வைப்பார்களாம். ஆனால் பென்னட் குடும்பத்தில் இஷ்டம்போல் ஐந்து பெண்களையும் எல்லா டான்ஸ் நிகழ்ச்சிகளுக்கும் போய் வருமளவிற்கு பெண்களைக் கட்டுப்படுத்த முடியாமல் சுதந்திரமாக விட்டிருக்கிறார்கள். மேலும் எந்தப் பொறுப்பான குடும்பத் தலைவரும் வருடாந்திரக் குடும்ப வருமானம் சொற்பமாக இருக்கும் பொழுது பெண்களின் திருமணத்திற்கு எதுவும் சேமிப்பு செய்யாமல் எல்லாவற்றையும் செலவு செய்ய மனைவியை அனுமதிக்கமாட்டார். ஆனால் திரு. பென்னட் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறார். இப்படி இத்தனை வருடம் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டிருந்தவர் ஓடிப்போன லிடியாவிற்கு மைத்துனர் தன் செலவில் திருமணம் செய்து வைத்துள்ளார் என்று தெரியும் பொழுது இத்தனை நாள் இல்லாத பொறுப்புணர்வு அவருக்குத் திடீரென்று வருகிறது. மைத்துனர் தான் செய்த செலவை (6000 pounds) ஈடு செய்யுங்கள் என்று கேட்காத பொழுதும், அப்படியே ஈடு செய்ய விரும்பினாலும் இவருக்குப் பல வருடங்களாகும் என்ற நிலை இருந்தபொழுதும், கேட்காத இடத்திலும், முடியாத இடத்திலும் செலவான தொகையைத் தான் திருப்பித் தர வேண்டும் என்ற ஒரு நல்ல



முடிவை எடுக்கிறார். இப்படி முடிவு செய்வது அவர் இதுவரையிலும் நடந்து கொண்டதற்கு முற்றிலும் ஒரு புதுமையான செயல்பாடாகும். இம்முடிவை அவர் வெற்றிகரமாக அமல்படுத்த வேண்டுமென்றால் அவர் மேலும் பத்து, பதினைந்து வருடங்கள் கடுமையாக உழைத்திருக்க வேண்டும். குடும்பச் செலவை மிகவும் சுருக்கியிருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? அவருக்கு வந்த சிறப்பான மனமாற்றத்திற்கு வாழ்க்கையும், ஒரு சிறப்பான Life Responseஐ வழங்கியது. அதாவது இந்த திருமணத்திற்கான செலவைத் தானே முழுமையாக ஏற்றுக் கொள்வதாகவும், கார்டினரோ, திரு. பென்னட்டோ யாரும் எதையும் திருப்பித் தர வேண்டியதில்லை என்ற ஒரு முடிவை டார்சி எடுக்கிறான். இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்ள வேண்டும். முடியாது என்ற சூழ்நிலையில், முடியாது என்று முடிவு செய்துவிடுவது சுலபம். ஆனால் முடியாத சூழ்நிலையிலும் எது முறையோ அதை நாம் செய்ய வேண்டும் என்று ஒருவர் முடிவு செய்யும் பொழுது நிலைமையே முற்றிலும் மாறி முடிவு எடுத்தவருக்கு சாதகமாக அமைகிறது.

இப்பொழுது ஷார்லேட்டிற்கு வருவோம். அவளுக்கு வயதாகி கொண்டு போகிறது. திருமண proposal கொண்டு வருபவர் எவரும் இல்லை. இத்தகைய சூழ்நிலையில் இருக்கின்ற எந்த ஒரு இளம் பெண்ணும் தன்னுடைய நட்பு வட்டாரத்தில் இருக்கின்ற வேறு எந்தப் பெண்ணிற்கும் திருமண வாய்ப்பு வந்ததென்றால் பொறாமைப்படுவாள், மனம் புழுங்குவாள். ஆனால் இப்படிப் பொறாமைப்படாமல் ஜேன் மேலும், லிசி மேலும் பிங்கிலியும், டார்சியும் interest காட்டுகின்றனர் என்பதை அறிந்து கொண்டு, “நீங்களும் அவர்களுக்கு response வழங்குங்கள். இது ஒரு நல்ல வாய்ப்பு, விட்டுவிடாதீர்கள்'' என்று உற்சாகம் ஊட்டுகிறார். இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மையும், நல்லெண்ணமும் திருமணத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணிடம்

வெளிப்படுகிறது என்றால் இது மிகவும் புதுமையான ஒரு விஷயமாகும்.

ஜேன் ஆஸ்டின் உருவாக்கிய ஒரு பெண் கதாப்பாத்திரத்தினால்தான் இவ்வளவு பாஸிட்டிவாக நடந்து கொள்ள முடியுமே தவிர நிஜ வாழ்க்கையில் கல்யாண வாய்ப்புக் கிடைக்காத எந்த ஒரு இளம்பெண்ணும் இப்படி பெருந்தன்மையாக இருப்பாளா என்பது சந்தேகம்தான். இத்தகைய பெருந்தன்மைக்கு வாழ்க்கை அவளுக்கு ஒரு நல்ல வெகுமதியும் அளிக்கிறது. அதாவது அவளுக்கு ஏற்ற ஒரு மணமகனை அவளிடம் அனுப்புகிறது. அவனும் ஒரு நல்ல சொத்துடன் வருகிறான். ஷார்லேட்டின் நடத்தையையும், கரோலினுடைய நடத்தையையும் நாம் இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். லிசியின் பக்கம் டார்சியின் கவனம் திரும்புகிறது என்று தெரிந்தவுடன் லிசியைப் பற்றிக் கிண்டலாகப் பேசுவது, டார்சியின் மனதைக் கெடுக்க முயற்சிப்பது என்றெல்லாம் கரோலின் செயல்படுகிறாள். இதுதான் இளம்பெண்களிடம் நாம் பொதுவாகப் பார்க்கிற போட்டி மனப்பான்மையாகும். ஷார்லேட்டும் இப்படி நடந்துக் கொண்டிருந்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கேயில்லை. ஆனால் இப்படி போட்டி மனப்பான்மையோ, பொறாமையோ வெளிப்படுத்தாமல் வருகின்ற அதிர்ஷ்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள், பாராமுகமாக இருந்துவிடாதீர்கள் என்று ஷார்லேட் சொல்வதுதான் புதுமையாகவும், வித்தியாசமாகவும் இருக்கிறது.

இப்பொழுது கார்டினர் தம்பதிகளுக்கு வருவோம். லிசியின் பர்சனல் விஷயங்களில் அவர்கள் தலையிடாமல் ஒரு கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வது ஒரு புதுமையான செயல்பாடாகும். இதே நம் நாட்டில் உறவினர்கள் ஒரு வீட்டிற்கு வந்தால் புதிதாக என்ன நடக்கிறது, யார் எப்படி இருக்கிறார்கள், திருமணப் பேச்சு ஏதேனும் நடக்கிறதா, வந்திருக்கும் வீட்டிலுள்ள பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், படித்துக் கொண்டிருக்கிறார்களா,



வேலை தேடிக் கொண்டிருக்கிறார்களா என்றிவைகளை எல்லாம் துருவி துருவி கேட்பார்கள். இதுதான் இந்தியாவில் நடக்கும். அதிலும் ஒரு பெண்ணிற்கு நிச்சயம் செய்ய முயற்சி எடுத்து ஏதோ ஒரு காரணத்தினால் அது கூடி வராமல் போய்விட்டது என்றும், இரண்டாவது பெண் மேல் ஒரு ஆண்மகன் interest காட்டுகிறான். ஆனால் அவளோ அவன் proposalஐ ஏற்காமல் மறுக்கிறாள் என்றிதுமாதிரியான ருசிகரமான செய்திகள் எல்லாம் நம் நாட்டில் உறவினர்கள் காதில் எல்லாம் விழுந்தால், ஏன் நிச்சயம் நின்றது, ஏன் இரண்டாவது மகள் நல்ல வசதியுள்ள, அந்தஸ்துள்ள, அழகான இளைஞனை மணக்க மறுக்கிறாள், பின்னணியில் என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளும்வரை ஓயவேமாட்டார்கள். தூங்கக்கூடமாட்டார்கள். கார்டினரிடம் லிசி டார்சி மிகவும் ஆணவம் பிடித்தவன், அடுத்தவர் சந்தோஷத்தைக் கெடுத்தவன், தன்னைவிட அந்தஸ்தில் குறைந்தவர்களை மதிக்காதவன் என்றெல்லாம் அவனை ஒரு முற்றிலும் நெகட்டிவ் நபராக வர்ணித்திருக்கிறாள். ஆனால் பிம்பெர்லி எஸ்டேட்டிற்கு இவர்கள் வந்த பொழுது அங்கிருக்கும் house keeperரோ தன்னுடைய முதலாளி மிகவும் தங்கமானவர், ஊழியர்களிடம் அன்பாகவும், பிரியமாகவும் பழகுபவர், மிகவும் பண்புள்ளவர் என்றெல்லாம் வர்ணிப்பதை இவர்கள் கேட்கிறார்கள். இப்படி நேரெதிரான வர்ணனைகளைக் கேட்பவர்கள் எவரும், அதுவும் மாமா, மாமி ஸ்தானத்தில் உறவினர்களாக இருக்கும்பட்சத்தில் “என்ன லிசி இது? நீ டார்சி மிகவும் கெட்டவர் என்று வர்ணித்திருக்கிறாய், house keeperரோ அவர் மிகவும் தங்கமானவர் என்கிறார். இதில் நீ சொல்வது சரியா? அவர்கள் சொல்வது சரியா? எது உண்மை?” என்று நிச்சயம் கேட்பார்கள். ஆனால் அவர்கள் அப்படி அவளை ஒன்றும் கேட்கவில்லை. ஒரு நெருங்கிய உறவினரிடம் இத்தகைய ஒரு கட்டுப்பாடு இருப்பது மிகவும் புதுமையான விஷயமாகும். இத்தகையக் கட்டுப்பாட்டுடன் அவர்கள் நடந்து கொள்வதற்கு

வாழ்க்கை எத்தகைய வெகுமதியை அளிக்கிறது என்ற ஒரு கேள்வி வருகிறது. அவர்களுக்கு நிச்சயம் வாழ்க்கை வெகுமதி அளிக்கத்தான் செய்கிறது. அந்த வெகுமதி என்னவென்றால் அவர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத உயரத்தில் இருக்கின்ற டார்சி அவர்களுடன் பிரியமாகப் பழகி அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் அவனுடைய மாளிகைக்கு விருந்தினர்களாக வரலாம், போகலாம் என்று ஒரு உரிமையை அளிக்கிறான். இது அவர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒரு கௌரவம் ஆகும்.

இதுவரையிலும் P & P கதாப்பாத்திரங்கள் வெளிப்படுத்தியுள்ள புதுமைகளை நாம் பார்க்கிறோம். பார்ப்பதோடு மட்டும் நாம் நின்றுவிடக் கூடாது. இந்தக் கதையையும் நம்முடைய வாழ்க்கையையும் நாம் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். அதாவது நம்முடைய வாழ்க்கையில் இம்மாதிரி என்னென்ன புதுமைகளைப் புகுத்த முடியும் என்று பார்க்க வேண்டும். நமக்கு மற்றவர்களோடு இருக்கின்ற உறவில் சிக்கல்கள் எழுந்தால், சுமுகக் குறைவு ஏற்பட்டால் டார்சி செய்ததுபோல் அவர்களைத் திருத்த முயற்சி செய்யாமல் நம்மை நாமே திருத்திக் கொண்டு பழையபடி சுமுகத்தை நிலைநாட்ட முடியுமா என்று பார்க்க வேண்டும். நமக்குத் தெரிந்தவர்களுக்கு அதிர்ஷ்டம் வருகிறதென்றால் அதை மனதார வரவேற்று ஷார்லேட் போலவும், லிசி போலவும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த முயற்சி செய்யலாம். கார்டினர் தம்பதிகள் போல அடுத்தவர்களின் பர்சனல் விஷயங்களில் அதிகம் தலையிடாமல் ஒரு கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளலாம். இந்தக் கதையைப் பொறுத்தவரையிலும் திருமண விஷயத்தில் power of values மற்றும் நெறியான செயல்பாடு மற்றும் தனித்தன்மை, இலட்சிய மனப்பான்மை இவையெல்லாம் எப்படிச் சிறப்பாக பலிக்கின்றன என்பதைப் பார்க்கின்றோம். திருமண விஷயம் என்று மட்டுமில்லாமல் வாழ்க்கையின் மற்ற எல்லா இடங்களிலும், அதாவது வேலை, குடும்ப வாழ்க்கை, அலுவலக



ஈடுபாடு, அன்னை சேவை மற்றும் பொது சேவை என்ற எல்லா இடங்களிலும் மேற்கூறிய values, individuality மற்றும் இலட்சிய மனப்பான்மை என்று எல்லாமே அபரிமிதமானப் பலனைக் கொடுக்கும். இதை நாம் புரிந்து கொண்டு வெற்றிகரமாக நம் வாழ்க்கையில் அமல்படுத்தினோம் என்றால் P & P commentaries மூலம் அப்பா நமக்கு வழங்க விரும்பிய அறிவு, அதிர்ஷ்டம், அருள் என்றெல்லாவற்றையும் நாமும் முழுமையாகப் பெற்றுக் கொண்டோம் என்று வரும். ஆகவே இத்தகைய முயற்சிக்கு முன்வருபவர்களுக்கு என் நல்வாழ்த்துகள்.

*முற்றும்.*

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எதுவும் செய்யாமல் சும்மா இருப்பது என்பது மனித நிலையில்லை;

தெய்வ நிலை.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அறிவுக்குப் புலப்படுவது கண்ணுக்குப் புலப்படாத போது, ஆத்மாவுக்குப் புலப்படுவது கண்ணுக்குத் தெரியுமா?

ஊனக் கண்ணுக்குத் தெரியாததை ஞானக் கண் பார்க்கும். ஞானக் கண்ணுக்குத் தெரியாததை ஊனக் கண்ணுக்குக் காட்டச் சொல்வான் மனிதன்.

## Consent of your soul and that of the Lord is necessary for death (Volume IV, 1963, Page 87)

### பிரம்மமும், ஆத்மாவும் சம்மதப்படாமல் உயிர் பிரியாது

- வாழ்வு விரிவடைந்து பிரபஞ்சத்தில் பரவி, பிரம்மத்தில் முழுமையடைகிறது.

  மனித வாழ்வு உலக வாழ்வாவதில் அந்நிலையில் பூரணம் பெறுகிறது.

  உலகத்தைக் கடந்த நிலையிலுள்ளது பிரபஞ்சம், பல ஆயிரம் உலகங்களை உட்கொண்டது.

  தனி மனிதன் தனக்காக வாழாமல் - அகந்தைக்காக வாழாமல் - பிறருக்காக வாழ ஆரம்பித்தால் மனித வாழ்வு உலக வாழ்வினின்று விரிந்து பிரபஞ்ச வாழ்வாகிறது.

  பிரபஞ்ச வாழ்வு இயற்கைக்குட்பட்டது.

  இயற்கையினின்று விடுபட்டால், பிரபஞ்ச வாழ்வு, பிரம்ம வாழ்வாகிப் பூரணம் பெறுகிறது.

- **நாமும், பிரம்மமும் சம்மதித்தாலன்றி மரணமில்லை என்பது மேற்கூறியது.**

- இது மரணத்திற்கு மட்டும் உரிய சட்டமல்ல, எல்லா பெரிய காரியங்கட்கும், சிறிய காரியங்கட்கும் பொருந்தும் அத்தியாவசியமான சட்டம்.

- பசுமைப் புரட்சி 1966இல் ஆரம்பித்தது. சுதந்திரம் வந்து 20 ஆண்டுகளாக உணவு உற்பத்தியைப் பெருக்க மத்திய சர்க்கார் செய்த முயற்சி பெரியது. அதைச் செய்த உணவு



மந்திரிகள் ஜகஜ்ஜீவன் ராம், கித்வாய், ராஜேந்திரப் பிரசாத், ராஜாஜி போன்ற பெரும் தலைவர்கள். பலனில்லை. அவர்கள் கூறியவை அனைத்தும் நாட்டுக்குப் பலன் தருபவை. எதிர்முனையில் விவசாயியுள்ளான். அவனுக்குச் சேவை-யுண்டு. பலனில்லை. பசுமைப் புரட்சி தான்யத்திற்கு அதிக விலை கொடுக்க முன் வந்து விவசாயிக்கும் பலன் தந்தது. பசுமைப் புரட்சி நாட்டுக்கும், நடுபவனுக்கும் பலனளிக்க முன்வந்ததால் முழு வெற்றி பெற்றது.

- சாமி வரமும், பூசாரி வரமுமிருந்தால்தான் பலன் நம்மை வந்து அடையும்.

- மகாத்மா காந்தி இராஜாஜியைத் தன் வாரிசு என்றார். வயதாலும், சேவையாலும், அனுபவத்தாலும், அறிவாலும் இராஜாஜி தன் ஆயுள் முழுவதும் ஜனாதிபதியாக இருக்க வேண்டியவர். நேரு அதற்காகப் பெருமுயற்சி எடுத்தார். வடநாட்டு தலைவர்கள் நேருவைக் காது கொடுத்துக் கேட்கத் தயாராக இல்லை. 1½ ஆண்டு கவர்னர் ஜெனரலாக இருந்தார். இராதாகிருஷ்ணன் 5 ஆண்டு ஜனாதிபதியாகவும் 10 ஆண்டு உப ஜனாதிபதியாகவுமிருந்தார். மகாத்மாவும், நேருவும் இராஜாஜிக்குக் கொடுக்க முயன்றும் அவரது சுபாவம் இடம் தரவில்லை. இராதாகிருஷ்ணன் வேதம், உபநிஷதம், கீதையை விவரமாக எழுதியவர். இனிய சுபாவமுள்ளவர். நாட்டின் ஜீவன் அவர் ஆன்மீக சேவையை ஏற்றது. கட்சித் தலைவர்கள் அவர் சுபாவத்தை ஏற்றனர். இரு முனைகளிலும் (பிரம்மமும், ஆத்மாவும்) உத்தரவிருந்ததால் இராஜாஜிக்குப் பலிக்காதது இராதாகிருஷ்ணனுக்குப் பலித்தது.

- ஸ்தாபனத்திற்குச் சேவை செய்ய முன்வரும் உறுப்பினர் குறைவு. இல்லையென்றும் கூறலாம். குடும்பத்திற்குச் சேவை செய்யப் பலரும் முன்வருவார்கள். அதைக் குடும்பம் ஏற்றால் சேவை பலிக்கும். சேவையைப் பெறும் தகுதியுள்ள

ஸ்தாபனங்கள் குறைவு. குடும்பத்தை எக்காரணத்தை முன்னிட்டும் ஆதரிக்கும் குணமுடையவர் பலர். அமெரிக்காவில் தங்கியுள்ள ஒருவர் புதுவை வந்து தன் குடும்பத்தைச் சார்ந்த அனைவரையும் சந்தித்து அவர்கள் பெற்ற கடன்கள் அனைத்தையும் அடைத்தார்.

- எல்லா ஸ்தாபனங்களும் சேவையை ஏற்க முடிவதில்லை.
- எல்லா ஸ்தாபனங்களிலும் சேவைக்கு முன்வருபவர்களிலர்.
- எல்லாக் குடும்பத்திற்கும் அத்தகுதியிருப்பதில்லை.
- எல்லோருக்கும் அம்மனநிலையிராது.

***ஒரு டம்ளர் தண்ணீர் குடிப்பதிலிருந்து நாட்டுக்குப் பிரதமராவது வரை பிரம்மமும் ஆத்மாவும் உத்தரவு தர வேண்டும்.***

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மௌன ஜபம் மனத்தின் ஆர்வம்.

அது சமர்ப்பணத்தைப் பூர்த்தி செய்யும்.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஜபமான சொல்லை சக்தியான உணர்வாக மாற்றுவது சமர்ப்பணத்தின் பாதை.





# ஞானக் கண்

இல. சுந்தரி

“சரவணா, ரேஷனுக்குப் போய் வந்துவிடுகிறாயா?” என்று ஒரு பையையும் ரேஷன்கார்டுடன் பணத்தையும் டீப்பாயின் மேல் மென்மையாக வைத்தாள் கீதா.

“மெதுவாக வை. அதற்கு வலிக்கப்போகிறது” என்று தலை வாரிக்கொண்டே கேலியாகச் சொன்னான்.

‘‘உனக்கு எல்லாமே கேலிதான்’’ என்றாள் அவன் அக்கா கீதா.

“ரேஷனுக்குப் போகச் சொல்லிவிட்டாயல்லவா? இனிமேல் கேலி ஏது? கியூவில் நின்று வீடு திரும்புவதற்குள் எனக்கு வயதாகிவிடும். கேலியெல்லாம் பேச முடியாது” என்று சலிப்பாக சீப்பை டிரஸ்ஸிங் டேபிள் மீது போட்டான்.

பொறுமையாகப் பக்கத்தில் வந்து சீப்பை எடுத்து அதற்குரிய இடத்தில் வைத்துவிட்டு, ‘‘அன்னையை அனுப்பிவிட்டுப் போ. சலிப்பில்லாமல் உற்சாகமாய் வருவாய்” என்றாள்.

‘‘ஆமாம், அன்னையை அனுப்பினால் அன்னை போய் கியூவில் முன்னால் நின்று ஜீனியை வாங்கி வந்து வீட்டில் கொடுத்து விடுவார். நான் வேறு ஏன் போக வேண்டும்?’’ என்று மேலும் கேலி பேசினான்.

‘‘அன்னையை அனுப்புவது என்றால் அன்னை சக்தியை அனுப்புவது என்று பொருள்”.

“சரி, இன்று கியூவில் நிற்க வேண்டாம். அன்னையே பார்த்துக் கொள்வார்” என்று கேலி பேசிவிட்டு, எரிச்சலுடன் கார்டையும்

பணத்தையும் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு, பையைக் கையில் எடுத்துக் கொண்டு, வேகமாகக் கதவைத் தள்ளித் திறந்துவிட்டு, திறந்த கதவை மூடாமல், செருப்பை அலட்சியமாய்க் காலில் மாட்டியவண்ணம் படியிறங்கினான்.

“அன்னையே, நீர்தாம் இவனுக்குப் பொறுமையைக் கற்றுத் தர வேண்டும்'' என்று மனதில் பிரார்த்தித்தவண்ணம், கதவை மெல்லச் சார்த்தி, தாழிடாமல் வைத்துவிட்டு உள்ளே சென்று வேலையைக் கவனித்தாள். இரண்டு மணி நேரம் கடந்திருக்கும். பட்டென்று கதவை உதைத்துத் திறக்கும் ஓசை கேட்டது.

சரவணன்தான். கதவைக் காலால் உதைத்துத் திறந்து கொண்டு, எரிச்சலுடன் உள்ளே வந்து சோபாவில் பொத்தென்று சாய்ந்து கொண்டு, கையிலிருந்த பையை வெறுப்புடன் விட்டெறிந்தான். “பெரிய அன்னை. அன்னையை அனுப்பினால் சுலபமாய் ரேஷன் வாங்கலாம் என்று சொன்னதைக் கேட்டு போனதுதான் மிச்சம். கியூவில் நின்று கால் வலி கண்டதுதான் பலன். என் முறை வரும்முன் ஜீனி தீர்ந்து நாளைக்கு என்று சொல்லிவிட்டான்”.

கீதா அவன் புலம்பலைக் கேட்டு, அவன் செய்கைகளைப் பார்த்து புன்னகை செய்தாள்.

''என்ன சிரிப்பு? எதற்கெடுத்தாலும் ஒரு மோனாலிசா புன்னகை செய்துவிடுவாய். நீதானே அன்னையை அனுப்பினால் எளிதில் ரேஷன் வாங்கலாம் என்றாய். இப்பொழுது பார். ரேஷனில் நின்றதுதான் மிச்சம். ஜீனியும் வாங்கவில்லை, ஒன்றும் வாங்கவில்லை'' என்று கோபமும் ஏமாற்றமுமாய்ப் பேசினான் சரவணன்.

“அன்னையை அனுப்பியது சரிதான். ஆனால் நீ அவரைச் செயல்பட அனுமதிக்கவில்லையே” என்றாள் புன்னகை மாறாமல்.

''ஆமாம், அன்னை கியூவில் வந்து நின்றார். நான்தான் அவரைத் தடுத்துவிட்டேன். போ அக்கா. ஏதாவது ஏற்றுக்



கொள்வது போல் பேசு” என்றான்.

“சற்றுக் கோபப்படாமல் இன்றாவது பொறுமையாய் இருந்து விஷயத்தைப் புரிந்து கொள். நீ புறப்பட்டதிலிருந்து உன் மனநிலை எப்படியிருந்தது என்று சொல்” என்றாள் கீதா.

“ஆமாம், என்ன மனநிலை வேண்டிக் கிடக்கிறது. அதுதான் அன்னையை அனுப்பிவிட்டோமே என்று ஹாய்யாகச் சென்றேன். கியூவே இராது. நான்தான் முதலாவதாக இருப்பேன். நான் போனதும் என்னை வரவேற்று, ஜீனி கொடுத்தனுப்புவான். வியர்வையில் நனைய வேண்டாம், அடுத்தவர் புகைக்கும் புகை நாற்றத்தைச் சுவாசிக்க வேண்டாம், யார் மீதும் இடித்துக் கொள்ள வேண்டாம் என்று ஏக கற்பனையுடன் போனேன். எல்லாம் வெறும் ஏமாற்றத்தில் முடிந்தது” என்று மீண்டும் சலித்துக் கொண்டான்.

''அன்னை என்பது ஒரு சக்தி என்று சொன்னேன். அது செயல்பட ஏற்றக் கருவியாய் நாம் நடந்து கொள்ள வேண்டாமா? பழுதான பல்பில் மின்சாரம் எப்படிப் புகுந்து ஒளி தர முடியும்?” என்றாள் கீதா.

“புரியும்படிச் சொல். ஏதேனும் புதிர் போடாதே”.

“அன்னை சக்தி செயல்பட்டு, நம் முயற்சி இன்றியே பலன் தரக்கூடியது. நாம் அதற்கேற்ற மனப்பக்குவம் பெற வேண்டாமா? எதிர்பார்ப்பு இருந்தால் சக்தி செயல்படுவது தடையாகும். அவசரம், எரிச்சல், அவநம்பிக்கை இதெல்லாம் அன்னையை விலக்கும்.

நம்பிக்கையும், பொறுமையும் அன்னை சக்தி செயல்பட ஏற்ற சூழ்நிலை. அதை விட்டு அழைத்த குரலுக்கு ஓடிவரும் அன்னையை செயல்படவிடாமல் உன் எதிர்பார்ப்பினாலும், வீண் கற்பனைகளாலும் தடுத்துவிட்டாய்” என்று நிதானமாக எடுத்துச் சொன்னாள் கீதா.

“நான் வேறு என்னதான் செய்திருக்க முடியும்?” என்றான் சரவணன்.

‘‘அன்னையிடம் ஒப்படைத்துவிட்டோம் என்ற நம்பிக்கையுடன் நீ உன் கடமையை அதாவது ரேஷனுக்குப் போவதைச் செய்திருக்க வேண்டும். அலாவுதீனின் அற்புத பூதம் என்று அன்னையை நினைப்பது அன்னை செயல்பட உதவாது. திரும்பி வரும்போது என்ன செய்தாய்? கதவைக் காலால் உதைத்தாய். பையைப் பொத்தென்று கீழே போட்டாய்” என்றாள்.

‘‘ஆமாம். கதவும், பையும் ஜடம்தானே, அதற்கென்ன மரியாதை?”

“நான் பல முறை உனக்குச் சொல்லிவிட்டேன். ஒவ்வொரு பொருளுக்கும் ஜீவனுண்டு. அதை மதிக்கத் தெரிந்தாலே போதும். எரிச்சல்படுவது, சோம்பல்படுவது, பொருட்களை அலட்சியப்-படுத்துவது இவையெல்லாம் நாமே முயன்று அன்னையை விலக்குவது”.

“பிறகு எப்படித்தான் உன் அன்னை செயல்படுவார்?” என்றான் பொறுமையிழந்து.

‘‘நம் பிழைகளை கண்டறிவது, யாரேனும் கண்டுபிடித்துச் சொன்னாலும் மனப்பூர்வமாய் அதை ஏற்று மனம் மாற முன்வந்தால் உடனே அன்னை செயலில் வெளிப்பட்டுவிடுவார். எத்தனை முறை என் அனுபவத்தில் அன்னையை உணர்ந்திருப்பேன்’’ என்று சொல்லும்போதே உடல் சிலிர்த்தாள்.

ஏதோ புரிவது போலிருந்தது. மிகவும் சிரமப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். கீழே போட்ட பையை மெல்ல எடுத்தான். மன்னிப்பு வேண்டும் மனப்பான்மையுடன் அதை மெதுவாக டீப்பாய் மேல் வைத்தான்.

“கீதா, என் தவறு எனக்குப் புரிகிறது. ஒப்புக்கொள்கிறேன். அன்னையின் அருளால் கிடைக்கும் என்ற பணிவான உணர்வில்லை எனக்கு. அன்னையை வைத்து நடத்திக் கொள்ளலாம் என்பது போல் அகங்காரமாய்ச் செயல்பட்டேன். கியூவில் பொறுமையிழந்து அவசரப்பட்டேன். கியூவே இருக்கக்



கூடாது, நான் மட்டுமே ரேஷன் வாங்க வேண்டும் என்ற நிலையை அன்னை ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் போனேன். என் அகங்காரத்திற்கு ஏமாற்றம் சரியான பரிசுதான். நான் மாறிக் கொள்ள முயற்சி செய்கிறேன் கீதா’’ என்று முதன்முறையாக பணிவாய்ப் பேசினான். இதுவும் அன்னையின் அருளே.

அந்தக் கணமே வாசலில் வேலுவின் குரல் “சரவணா” என்று இவனை அழைத்தது.

கையில் ஏதோ சாமான் வாங்கிய பையுடன் வெளியே நின்றிருந்தான் வேலு. வேலு இவனையொத்த வயதுடைய இளைஞன். அதிகப் படிப்பில்லாத ஏழை. அந்தக் காலனி முழுதிற்கும் அறிமுகமானவன். அடுத்தவர்க்கு உதவி செய்து அதில் வரும் பொருளைக் கொண்டு பிழைப்பவன். டெலிபோன் பில், எலக்ட்ரிக் பில், யாவும் கட்டிக் கொடுப்பான். மளிகையோ, மருந்தோ யார் எது கேட்டாலும் வாங்கித் தருவான். உணவு கொடுத்தாலும், பணம் கொடுத்தாலும், பழைய பேண்ட், ஷர்ட் எது கொடுத்தாலும் பெற்றுக் கொள்வான்.

‘‘வா வேலு. என்ன விஷயம்?’’ என்று கேட்டவண்ணம் சரவணன் வெளியே வந்தான்.

அதற்குள் கீதா, “சரவணா அவனை உள்ளே கூப்பிடு” என்று கூறி, இருவருக்கும் டீ கொண்டு வந்தாள்.

நன்றியுடன் உள்ளே வந்தான் வேலு. கீதா எப்பொழுதும் அவனை சரவணனைப் போலவே அன்பாக நடத்துவாள்.

‘‘வந்ததைச் சொல்லிவிடுகிறேன். சரவணா, நீ இன்று ரேஷனுக்கு வந்து கியூவில் நின்று ரேஷன் வாங்காமல் திரும்பியதைப் பார்த்தேன். நான் நம் கேசவன் வீட்டிற்கு ஜீனி வாங்க ரேஷன் கடைக்கு வந்தேன். சீக்கிரம் வந்ததால் முதலிலேயே வாங்கிவிட்டேன். எதிர் கடையில் டீ குடித்துவிட்டு நியூஸ் பேப்பர் படித்தபோது நீ வெறும் பையுடன் சென்றதைக் கவனித்தேன். கேசவன் வீட்டில் பணத்தையும் கார்டையும் என்னிடம் நான்கு

நாட்கள் முன்பே கொடுத்துவிட்டார்கள். ஜீனி போடும்போது வாங்கித் தரச் சொல்லியிருந்தார்கள். இன்றுதான் ஜீனி போட்டதால் இன்றுதான் வாங்க முடிந்தது. அவர்கள் வீட்டிற்குப் போனால் கதவு பூட்டியிருந்தது. பக்கத்தில் விசாரித்ததில் எதிர்பாராமல் அவசர வேலையாய் வெளியூர் போயிருக்கிறார்களாம். வர நான்கு நாட்கள் ஆகுமாம். அதுதான் உங்கள் வீட்டிற்குப் பயன்படுமே என்று கொண்டு வந்தேன். உன் கார்டையும் பணத்தையும் என்னிடம் கொடு. நீ படிக்கும் பையன். நீ கடையில் நின்று நேரத்தை இழக்க வேண்டாம். இது எனக்குப் பழகிய வேலை. நான் வாங்கி கேசவன் வீட்டினர் வந்ததும் கொடுத்துக் கொள்வேன்'' என்றான்.

கீதா தீவிர அன்னை பக்தை. அன்னையின் கோட்பாடுகளில் அவளுக்கு முழு நம்பிக்கையுண்டு. சிறியது, பெரியது என்ற வேறுபாடே இல்லாமல் ஒவ்வொன்றிலும் அன்னை முறையைப் பின்பற்றும் குணம் அவளுக்கு. எது நடக்கவில்லையென்றாலும் தான் அது குறித்து என்ன பிழை செய்தோம் என்றுதான் ஆராய்வாளே தவிர யாரையும் குறை கூறமாட்டாள். அன்னையிடம், மனமாற்றம் என்பது பெருஞ்சாதனை புரியவல்லது என்பதை அவள் அறிவாள்.

எதற்கெடுத்தாலும் குதர்க்கம் பேசும் சரவணனுக்கு இன்று அன்னை ஞானக் கண் திறக்க முடிவு செய்திருக்கிறார் போலும். தன் அகங்காரத்திற்குப் பரிசாய் ஏமாற்றமும், மனம் மாற முன்வந்தவுடன் வீடு தேடி வந்த ஜீனியும் அவனுக்கு அன்னையை உணர்த்தின.

'மனம் மாற முன்வந்ததும் என்ன நிகழ்ந்தது பார்த்தாயா?' என்று கேட்பது போல் கீதா அவனைப் பார்த்தாள்.

''இரு வேலு, இதோ வருகிறேன்'' என்று உள்ளே போன சரவணனைக் கவனித்த கீதா, அவன் உள்ளே அன்னைக்கு நமஸ்கரித்து நன்றி சொன்னதைப் பார்த்துப் பரவசப்பட்டாள்.

*முற்றும்.*

❋❋❋



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 49. பிரம்ம ஜீவியம் சித்திப்பது - மனம் அதன் மூலத்தை அடைகிறது.

- பிரம்மம் சித்திப்பது மோட்சம் பெறுவது.
- பிரம்மம் சித்திக்கும் நிலைகள் பல.
- ஜீவாத்மா சித்திப்பது முதல் நிலை.
- ஜீவாத்மாவுக்கு மற்ற அனைத்து ஜீவாத்மாவும் சித்திப்பது ஒரு நிலை.
- பரமாத்மா சித்திப்பது பெரிய நிலை.
- டாக்டர், இன்ஜினீயரிங் பட்டங்களுக்குப் பயிற்சியுண்டு. அது லேசான பயிற்சி.
- அந்தப் பயிற்சி தொழில் செய்யப் போதாது.
- தொழிலில் அனுபவசாலியிடம் வேலைக்கமர்ந்து பயிற்சி பெற்றால், சொந்தமாகச் செயல்படலாம்.
- பட்டமே முடிவானால், அதற்குப் பயிற்சியோ, தொழிலோ வாராது.
- மோட்சம் அது போல் பரமாத்மாவை, பிரம்மத்தை அடைவது.
- பயிற்சி, அனுபவம் மூலம் பெற்ற பட்டம் தொழில் செய்யப் பயன்படும்.
- இது பூரண யோகம்.
- பகவான் ஸ்ரீ அரவிந்தர், பிரம்ம ஜீவியம் பெற்றவர் ஆசிரமத்தில் 6 பேர் என்றார்.
- பூரணப் பயிற்சியின்றி பெற்ற பிரம்ம ஜீவியமிது.

※ டாக்டர் தொழிலில், நர்ஸ், கம்பவுண்டர், மருந்து கடைக்காரன் ஆகியவர்க்கு டாக்டருடைய திறமை அனுபவத்தால் சில விஷயங்களில் முழுமையாகவும் வருவதுண்டு.

※ பிரம்ம ஜீவியம் என்பது மாயை எனப்படும், இது பிரம்மத்தின் ஜீவியம்.

※ சச்சிதானந்தமே இதனால் சிருஷ்டிக்கப்படுகிறது.

※ சத்தியஜீவியம் சச்சிதானந்தத்தால் சிருஷ்டிக்கப்படுகிறது.

※ மனம் சத்தியஜீவியம் உற்பத்தி செய்வது.

※ பெரிய தலைவர், பணக்காரர், கம்பனி முதலாளி, மந்திரி ஆகியவர்களை அணுகி வேலை செய்பவர்கள் பல நிலைகளிலிருப்பார்கள்.

※ உடனுறைந்து உதவி செய்வார்கள்.

※ எடுபிடி வேலை செய்வார்கள்.

※ தானே வந்து கலந்து கொள்வார்கள்.

※ ஒரு நாள் அழைத்தால் ஒட்டிக் கொள்வார்கள்.

※ இவர்கள் டிரைவராக இருந்தாலும் தலைவருடைய பவர் ஓரளவு இருக்கும்.

※ யாரோ ஒருவர் தலைவருக்கே வாரிசாகவும் வருவதுண்டு.

※ இவை வாழ்க்கை வண்ணங்கள்.

※ ஒரு ஆத்மா மோட்சம் பெற்றால் அதற்கு முன் 21 தலைமுறைகட்கு பயனுண்டு.

※ அதன் பின் வரும் சந்ததிகளில் அது அழியாது. ஏதோ ஒரு மூலையிலிருக்கும்.

※ **இந்தியருடம்பில் ஜோதியுண்டு. மேல் நாட்டார் உடல் இருளாக இருக்கிறது என்கிறார் அன்னை.**

※ பிரம்ம ஜீவியம் எந்த வழி வந்தாலும் பிரம்ம ஜீவியம் பெரியது.

※ அன்னை சூழலுக்கே அந்தச் சக்தியுண்டு.



※ ஒருவர் பிரம்ம ஜீவியத்தை எந்த அளவில் பெற்றுவிட்டாலும், அவருக்கு யோகம் பலிக்கும்.

※ கட்சியில் மெஜாரிட்டியிருந்தால் தலைமையுண்டு.

※ படிப்பு, அறிவு எவ்வழி வந்தாலும் அதற்கு உயர்வுண்டு.

※ பணம் எப்படி சம்பாதித்தாலும், அதற்குப் பவர் உண்டு.

※ பவர் பணம் வந்த வழிப் போல அமையும்.

※ அன்பர்கட்கு இந்த வாய்ப்பு எப்பொழுதும் உண்டு.

※ ஸ்டாலின் புரட்சியில் அப்படி தலைமைப் பதவிக்கு வந்தவரேயாகும்.

※ குருஷேவ் 29 வயது வரை எழுதப் படிக்கத் தெரியாமல் தலைமைக்கு வந்தார்.

※ குருவாயூர் குருக்கள் வீட்டு வேலைக்காரி அவ்வழி மோட்சம் பெற்றாள்.

※ காஞ்சீபுரம் கோவிலில் மூகம் கவியானது அது போல.

※ ஆடு மேய்த்த காளிதாசன் பெரிய கவியானதும் அதைப் போலவே.

*தொடரும்.....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஊனக் கண் பொருள்களைத் தனித்தனியே காண்கிறது.

அதை ஆராய்வது விஞ்ஞானம்.

ஞானக் கண் சிருஷ்டியை மயன் செய்ததை அறிகிறது.

புறத்தில் அகத்தைக் காண்பது பூரணம்.

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

221. *தனக்கு ஒரு கண் போனாலும் அடுத்தவருக்கு இரண்டு கண் போக வேண்டும்.*

**தனக்கு இரண்டு கண் போனாலும், அடுத்தவருக்கு ஒரு கண்ணாவது வர வேண்டும்.**

222. *கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல.*

**கும்பிடப் போன தெய்வம் கூடவேயிருப்பது தெரிவதில்லை.**

223. *சுத்தம் சோறு போடும்.*

**சுத்தம் சோற்றிலிருந்து சொர்க்கம் வரை தரும்.**

224. *குரைக்கிற நாய் கடிக்காது.*

**வழிபாடு வழி காட்டாது.**

225. *மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள்.*

**அருள் வந்தால் ஆயுள் முழுவதும் இருக்கும்.**

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எந்தப் பெரிய மனிதனுக்கும் சொந்தமான விஷயங்களில் தெளிவு, நேர்மையிருக்க முடியாது.





**The direct transformation of the triple vibration into Ananda is possible, but less easy to the human being.**

(*Page 109, The Life Divine*)

**துன்பம், வலி, வேதனையாகியவற்றை நேரடியாக ஆனந்தமாக மாற்றுவது முடியும், ஆனால் அது மனிதனுக்கு எளிதல்ல.**

- வேத ரிஷிகள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்ததால் மனிதனை இறைவனிடமிருந்து பிரிக்கவில்லை, பிரிவினை துன்பத்திற்கு வித்து. அகந்தையைச் சரணடைவது மூலம் அவர்கள் சச்சிதானந்தப் பேறு பெற தெய்வங்களை நாடினர்.
- வேதாந்தம் சர்வம் பிரம்மம் என்று கண்டது. இருளுக்கு ஜீவனில்லை என அறிந்தனர். ஆனால் மோட்சத்தை அவர்கள் நாடியதால், இருள் இருளாகவே நிலைத்து நின்றது.
- புத்தர் அனைத்து துன்பங்கட்கும் அகந்தையே அடிப்படை என்று கண்டார். அகந்தையை அழித்து பெரும் சக்தியை வெளியிட்டார். 50 மைல் தூரத்தில் புத்தர் வருவது தெரியும்.
- கீதை மோட்சம் பெறும் எளிய வழியாக சரணாகதியைக் கூறுகிறது.
- **மனிதன் இருளிலிருந்து தப்புவது பெரியது. இருள் உலகில் அழிவது முடிவானது.**

தபஸ்வி துன்பம், வலியை வெல்லும் மார்க்கத்தைக் கண்டவன்.

துன்பமும், வலியும் இன்பத்துடனும் சந்தோஷத்துடனும் தொடர்பு கொண்டவை.

அவை ஒரே நாணயத்தில் இரு புறம்.

ஒன்றை நாடினால், அடுத்ததை - எதிரானதை - விலக்க முடியாது.

அதனால் துன்பத்தின் மறுபுறமான இன்பத்தைத் துறவி நாடவில்லை.

துறவிக்கு விடுதலை கிடைத்தது.

ஸ்ரீ அரவிந்தம் துன்பத்தை ஏற்று திருவுருமாற்ற வேண்டும் எனக் கூறுகிறது.

**துன்பத்தைத் துன்பமாக ஏற்றால் துன்பம் நாம் ஏற்பதால் வலிமை பெறும்.**

துன்பத்தை இன்பத்தின் மறுபுறமாகப் புரிந்து ஏற்றால், துன்பம் வலிமை பெறாது.

புறம் நமக்குத் துன்பம் தருவது அகம் துன்பத்திலிருப்பதால் என ஸ்ரீ அரவிந்தம் கூறுகிறது.

நம் முன்னே உள்ள துன்பத்தைத், துன்பத்தை ஏற்கும் பாங்கை, நாம் கைவிட்டால், துன்பம் கரையும், திருவுருமாறும்.

✼ அறிவில்லாமல் பேசுபவனுக்குப் பதில் கூறினால் அவன் அறிவின்மை வலுப் பெறும் என்பதை அறிவு ஏற்காது.

எதிரி வம்பு வளர்க்கும் பொழுது, அவன் தெரிந்தே செய்கிறான் என்பதால், நாம் எந்தப் பதில் கூறினாலும் அதற்குப் பதில் வரத் தயங்காது.

**அவனுடைய தவற்றிற்கு நாம் கூறும் பதிலால் நாமும் அத்தவற்றில் பங்கு கொள்கிறோம்.**

நம்மையறியாமல் நாம் தவற்றுக்கு உடந்தையாகிறோம்.



பதில் கூற மறுத்தால் எதிரி வலுவிழப்பதைக் காணலாம்.

Non-Reaction எரிச்சல்படாமலிருப்பது பெரிய விஷயம்.

அதைவிடப் பெரியது திருவுருமாற்றம்.

எதிரி எரிச்சலைக் கிளப்பினால் 'என்னிடம்' எரிச்சல் இருப்பதால் எதிரி கிளப்புகிறான் எனப் புரிவது ஞானம். 'அந்த எரிச்சலுக்கு உயிர் வரும்படி நான் பதில் கூறக்கூடாது' என்பது அறிவு.

அந்த எரிச்சலைச் சந்தோஷமாக மாற்றுவது திருவுருமாற்றம். 'என் எரிச்சலுக்கு முடிவு நேரம் வந்துவிட்டது' என்ற உணர்வு சந்தோஷம் தரும்.

- **அது திருவுருமாற்றம்.**
- **திருவுருமாற்றம் எரிச்சல்படாமலிருப்பதைவிட உயர்ந்தது.**

✼✼✼

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வீசும் காற்றை உடல் அறிவதுபோல் அசையும் அருளை ஆத்மா அறியும்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எச்செயல் அன்னையை நெருங்கப் பயன்படுகிறதோ அதுவே அன்னைக்குரிய பழக்கம்.

பக்குவம் தரும் பழக்கம் பவித்திரமானது.

மனம் நெஞ்சமாவது பக்தி.

# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/38) ஒரு இலட்சியம் வெற்றி பெற ஒரே வழி அதற்கெதிரான முறையைக் கையாள்வது. இலட்சியம் அக வாழ்வுக்குப் போய் வலிமை பெற்று புற வாழ்வை தன்னுட் கொண்டால், வெற்றி பெறும். வலிமையே வெற்றி பெறும் என்ற லௌகீகச் சட்டமே அப்பொழுதும் நிலைக்கிறது.**

☆ **வலிமைக்கு மட்டுமே வெற்றி.**

- உலகில் உள்ளது வலிமை மட்டுமே.
- வலிமையற்றது தோற்றம்.
- குழந்தையுடன் விளையாடும்பொழுது நாம் தோற்பது தோற்றம்.
- நாம் அத்தோற்றத்தை ஏற்றுச் செயல்படுகிறோம்.
- அது உண்மையில்லை.
- உண்மையில் நமக்கு வலிமையுண்டு, வலிமையில்லாமலில்லை. நமக்கு அது தெரியும்.
- அதே போல் வலிமையும் ஒரு தோற்றமே.
- குழந்தையுடன் விளையாடும் பொழுது வலிமையற்றவராய் தோன்றினாலும், நமக்கு வலிமையுண்டு என நாம் அறிவோம்.
- நாம் பிரம்மம் என்பது ஆன்மீக உண்மை.
- நாம் பிரம்மம் என்பதைப் பிறவி எடுத்தவுடன் மறந்து விட்டோம்.
- பிரம்மம் வலிமையும், வலிமையற்ற நிலையையும் கடந்தது.
- பிரம்மம் வலிமையற்ற நிலையை ஏற்கலாம்.



- இரண்டையும் ஒரே சமயத்திலும் பிரம்மத்தால் ஏற்க முடியும்.
- இலட்சியம் உலகுக்குண்டு, பிரபஞ்சத்திற்குண்டு, பிரம்மத்திற்குண்டு.
- இந்த மூன்று நிலைகளிலும் இலட்சியம் பூர்த்தியாகும்.
- துஷ்டனை அழித்துச் சிஷ்யனைப் பரிபாலனம் செய்வது ஒரு நிலை.
- துஷ்டனை மாற்றி, உலகில் இனி துஷ்டத்தனமில்லை என்பது இலட்சியம் பூரணமாகப் பூர்த்தியாவது.
- அதைச் செய்ய சிஷ்யனுடைய துஷ்டத்தனத்தையும் அழிக்க வேண்டும்.
- அது திருவுருமாற்றம்.
- அதைச் செய்ய நாம் பிரம்மம் என்பதை நினைவுபடுத்த வேண்டும்.
- அதற்கு நாம் கையாளும் முறைக்கு எதிரான முறையைக் கையாள வேண்டும்.
- அகிம்சையை நிலைநிறுத்த ஹிம்சையைப் பயன்படுத்துவதாகும்.
- குழந்தையிடம் அன்பு செலுத்த கண்டிப்பு வேண்டும்.
- உடல் நலம் பெற, நோயுற்ற நேரம், விஷம் சாப்பிட வேண்டும்.
- சிந்தனை புரிய, சிந்தனையைக் கையாள்வதுடன், சிந்தனையைக் கைவிட வேண்டும்.
- டார்சி தன்னை விரும்பி மணக்க அவனை கடூரமாகத் திட்ட வேண்டும் எனத் தன்னையறியாமல் எலிசபெத் அறிந்திருந்தாள்.
- பிங்லியை மணக்க, அவனை விரும்பியது ஒரு வழி. நேரம் சரியில்லாத பொழுது பிங்லியை மறந்தால், பிங்லியை மணக்க முடியும் என்பது அதற்கெதிரான வழி. ஜேனும், எலிசபெத்தும்

அப்படி நடந்தது, அவர்களை அறியாமல் நடந்ததாகும். அன்பன் கண்மூடியாகச் செயல்படுவதைவிட விழிப்புடன் செயல்பட வேண்டும். எளிய மனிதர் நிர்ப்பந்தத்தால் செய்வதை அன்பன் தெரிந்தும், உணர்ந்தும், விழிப்போடு செயல்பட வேண்டும்.

அது நிறைவேற நேரம் வரும்பொழுது எதிரான முறையைக் கையாள வேண்டும்.

✲✲✲

## II/39) இலட்சியத்தின் கனவுலகத்தைவிட லௌகீகத்தின் யதார்த்தம் அஸ்திவாரமாகும்.

☆ **உடலும் ஜடமும் உயர்வுக்கு உயிரானவை.**

- இலக்கியம் இலட்சியத்தின் கனவுலகம்.
- உலகப் பேரிலக்கியங்கள் கவியின் கனவுலக சிருஷ்டியாகும்.
- கற்பனை வளமானவர்க்கு கற்பனையில் பலிப்பது காவியமாக, கதையாக உருவம் பெற்று வாசகரிடையே பிரபலமடைவார்.
- அனுபவசாலிகள் அதிகம் சாதித்தவரானால், அவர்கட்குக் கற்பனைத் திறன் இராது.
- இலட்சியவாதிகள் சாதிக்கும் கற்பனையை நாடுவர்.
- சாதனையின் கூறுகளை உலக அனுபவம் உணர்த்தியதும் கற்பனையைக் கைவிடுவர்.
- நேரு அது போல் கனவுலக சஞ்சாரி.
- அவர் கனவு கண்ட சுதந்தரம் பலித்தது, சுபிட்சம் அவர் வாழ்நாளில் பலிக்கவில்லை.
- இலட்சியவாதி கனவிலும் கருத மறுப்பது, ஆழ்மன உத்தரவு பெறுவதால் அவர் காலத்திற்குப் பிறகு பலிக்கும்.



- இந்திராவுக்கு மந்திரி சபையிலோ, லோக் சபாவிலோ இடம் தர மறுத்தார் நேரு. அது இலட்சியத்தின் சிகரம்.
- பற்றற்ற அந்தப் பொறுமையான நிதானம் இந்திராவுக்கு நீண்ட நாள் - நேரு ஆண்ட காலம் - பிரதமர் பதவியை வலிய பெற்றுத் தந்தது.
- லௌகீகம் என்றால் குடும்ப வாழ்வு.
- குடும்ப வாழ்வுக்கு நடைமுறையில் தேவைப்படுவது வீடு, நிலம், சொத்து, வருமானம்.
- இலட்சியவாதிகள் கனவு காண்பதால்தான் உலகம் இயங்குகிறது என்பது ஆன்மீக உண்மை.
- ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர் பலர் வாழும் ஊர் என்னூர் என்கிறார் சங்கப் புலவர்.
- அவரிருப்பதால்தான் என் தலை நரைக்காமலிருக்கிறது எனவும் கூறுகிறார்.
- இல்லறம் அவசியம், துறவறம் தூய்மைக்கு உறைவிடம்.
- இல்லறத்தைத் துறவறத்தின் தூய்மையோடு நடத்தியவருக்குக் கற்பனை சிருஷ்டியின் அரங்கம்.
- அவருக்கு ஓர் எண்ணம் கற்பனையில் பலித்தால், அது ஒரு நாள் நடைமுறைக்கு வரும்.
- கற்பனைக்கு அச்சிறப்புண்டு.
- சிறப்பும் நீடிக்க அஸ்திவாரம் தேவை.
- அந்த அஸ்திவாரம் குடும்ப வாழ்வின் நடைமுறைத் தேவைகள்.
- இருக்குமிடம் தேடி என் பசிக்கு அன்னம் உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன் என்பது தவத்திற்கு அந்தச் சக்தியுண்டு என்கிறது.
- தவம் பலித்த நிலையில் வாழ்வின் தேவை அபரிமிதமாக இருக்கும்.

- உலகெங்கும் கோயில்கள், சர்ச்சுகள் பெரும் செல்வம் பெற்றுள்ளனர்.
- வறுமைக்கும் தவத்திற்கும் தொடர்பில்லை.
- எளிமையை வறுமையாகக் கருதக்கூடாது.
- எளிமை ஆன்மீக வளம் நிறைந்து வறுமையின் தோற்ற-முடையது.
- எளிமையுள்ள இடத்தில் வறுமை வர முடியாது.
- எளிமை வறண்டிருந்தாலும், போலியானாலும் வறுமை எழும்.

❋❋❋

## II/40) சரியான குறிக்கோளைத் தவறான யுக்தியால் இலட்சியம் பின்பற்றுகிறது.

☆ **தவறும் சரியும் இணையாது.**

- காரியம் கூடிவந்தால் கடைப்பிடித்தது சரி என்பான்.
- உரம் போட்டு அதிக மகசூல் எடுத்தால் உரம் சரி.
- உருப்போட்டு பாஸ் செய்தால் உருப்போடுவது சரி.
- சம்பாதிக்க ஆரம்பித்தபின் குடும்பத்தை கவனிக்காவிட்டால் வாழ்க்கை சுலபமாவதால், தனிக்குடும்பம் சரி.
- முடிவு ஆதாயமானால் முறை சரி என்பது மனம்.
- யார் வீட்டு விசேஷத்திற்கும் போகாவிட்டால் செலவு மிச்சம். 20 ஆண்டிற்குப் பின் உன் வீட்டு விசேஷத்திற்கு எவரும் வரமாட்டார் என்பது ஆரம்பத்தில் தெரியாது.
- இன்று முடியும், ஆதாயம் என்று வாழ்பவன், இந்த உலகில் மரியாதையுடன் வாழ முடியாது.
- சத்தியாக்கிரஹமும், ஹர்த்தாலும், அகிம்சாவாதமும் 30 ஆண்டு தொடர்ந்து பலன் கொடுத்ததால் சுதந்தரம் வன்முறையின்றி வரும் என்று கூற முடியாது.



- முடிவு பலன் உடன் தந்தாலும், மூலத்தைக் கருதி செயல்படுவது அவசியம் என மகாத்மா அறிந்து 1947இல் பேசினார்.
- ஓர் ஸ்தாபனத்தில் கோள் சொல்லி நெடுநாள் அதிகாரம் செலுத்தினாலும், நேரம் வரும்பொழுது பதவி அவனுக்குப் போகாது. பதவி பறிபோனபின் தொடர்ந்து கோள் சொல்லலாம்.

*உடனடி பலன் கை மேல் கிடைத்தால், முடி முடிவில் பறி போகும்.*

- கோபம் செல்கிறது எனச் செலுத்தினால், நாள் கழித்து கோபம் வயிற்று வலியாகும். எந்த மருந்துக்கும் குணமாகாது.
- குறிக்கோள் சரியாக இருப்பதைப் போல், அதைப் பெறும் யுக்தியும் சரியாக இருக்க வேண்டும்.
- கேட்பாரில்லை என சௌகரியத்தைப் பாராட்டலாம்.

  அதிகாரம் உள்ளது என செலுத்தலாம்.

  விட்டுக் கொடுக்கும் நிர்ப்பந்தமில்லையென விட்டுக் கொடுக்க மறுக்கலாம்.

  சொல்லும் பொய்யைத் தட்டிக் கேட்க மனிதரில்லையென, தொடர்ந்து பொய் சொல்லலாம்.

*முடிவில்*

சௌகரியமே இல்லாத நிலையான சந்தர்ப்பம் எழும்.

அதிகாரமே அடிப்படையோடு அழிந்துவிடும்.

விட்டுக் கொடுக்க ஒன்றுமில்லையென்றாகும்.

சொல்லும் பொய்யைக் கேட்க ஒருவரிலர் என்பது

உறுதிப்படும்.

❊ இவை யுக தர்மங்கள்.

திரௌபதியை,

ஐந்து கணவராலும் பாதுகாக்க முடியாமற் போயிற்று.

அரியாசனம் அர்த்தமற்றதாகிவிட்டது அவளுக்கு.

பிதாமகன் பிரயோஜனமில்லாத மகனாகிவிட்டான்.

ஆச்சாரியார், குருமார்கள் அவல நிலையை அடைந்தனர்.

நேர்மைக்கே உரிய விதுரனும் ஆறுதலும் கூற முடியவில்லை.

அனைவரும் கைவிட்டாலும், ஆண்டவன் கைவிடமாட்டான்.

அவள் கூறிய சபதம் நிறைவேறி அவையினர் அனைவரையும் முடிவில் அழித்தது.

குறிக்கோள் நெடுநாளையது, இன்றோடு போவதல்ல.

சரியான குறிக்கோளைச் சரியான யுக்தியால் எட்ட வேண்டும்.

***சரியும் தவறும் இணைந்து செயல்படா.***

*தொடரும்....*

❊❊❊

**ஜீவிய மணி**

***வாழ்வை ஏற்கும் அன்னைக்கு மனித வாழ்வு புறம்பாகும்.***

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## உறவு - தொடர்பு

உறவுகள் ஏற்கனவே ஏற்பட்டது. நண்பர்கள் நாமே ஏற்படுத்திக் கொள்வது. நாமே ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பில், நம்மையறியாமல் ஏற்கனவே ஓர் உறவிருக்கும் என நாம் எதிர்பார்ப்பதில்லை. பல்வேறு உறவுகளுண்டு. நாள் கழித்து ஒரு சில வெளிப்படும். பெரும்பாலும் பழைய உறவுகள் வெளிவருவதில்லை.

வேலூரில் படித்த பெண் பெற்றோர் புதுவை வந்தனர். அன்பர்களாயினர். ராணிப்பேட்டையிலிருந்தவர் அன்பரான பின் புதுவையில் தங்க முடிவு செய்தார். பெண் திருமண வயதான பின் ராணிப்பேட்டை அன்பரின் தம்பி மகனைத் திருமணம் முடித்தனர்.

ராணிப்பேட்டை அன்பர் சிறிது காலம் வேலூரி-லிருந்ததால் பெண்ணும், அவரும் வேலூரைப் பற்றிப் பேசினர். பெண் தான் குடியிருந்த வீட்டை அடையாளம் கூறிய பொழுது, ராணிப்பேட்டை அன்பர் கவனமாகக் கேட்டு விசாரித்து,

"அதே வீட்டில் நான் குடியிருந்தேன்" என்றார்.

பிற்காலத்தில் சம்பந்தம் ஏற்படப் போவதை வீடு அறிந்து அவர்களை ஒரே வீட்டில் குடியிருக்கச் செய்தது வாழ்வின் இயல்புகளில் ஒன்று.

***நம்மை மறப்பது நம் கர்மம் அழிவது.***

❋❋❋

## பஸ்-கட்டணம்

குழந்தைகள் சிறுவர்களாக இருக்கும் பொழுது அவர்களைப் பள்ளிக்குத் தயார் செய்வது தாயாருக்குச் சாதனை. கணவன் ஆபீசுக்குப் போக வேண்டும். குழந்தைகள் பள்ளிக்குப் போக வேண்டும். சிறு குழந்தைகளானால், குளிப்பது, டிரஸ் செய்வது, புத்தகம் எடுப்பது முதல் தாயார் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். கணவனுக்குச் சாப்பாடு கட்ட வேண்டும். குழந்தைகட்குச் சாப்பாடு கட்ட வேண்டும். தாயாரும் வேலைக்குப் போவதென்றால் மேலும் சிறப்பு.

ஒரு தாயாருக்கு இப்பொறுப்புகளுக்கு மேலும் ஒரு சிரமம். தான் வேலைக்குப் போகவில்லை என்பது வசதி. பள்ளிக்கூட பஸ் ஒரு நேரமாக வராது. முன்கூட்டிப் போய் காத்திருப்பது மேலும் தினசரி ஒரு சங்கடமாக இருந்தது. இதற்கு அன்னை ஒரு வழி காட்டக்கூடாதா என நினைத்தார். பலரையும் கலந்து ஆலோசித்தார். "பள்ளி சம்பந்தமான அத்தனை விஷயங்-களையும் ஒன்று தவறாமல் கூறுங்கள்" என்றார் ஒருவர். அதைக் கூறிவரும் பொழுது பஸ்-கட்டணம் எப்பொழுதும் தாமதமாகக் கட்டுவதைக் குறிப்பிட்டார். **அதைத் தாமதமில்லாமல் கட்டிப் பார்க்கலாம் என அன்பர் கூறினார்**. கட்டினார். பஸ் மறு நாளிலிருந்து குறித்த நேரத்திற்கு வருகிறது.

பஸ் கட்டணத்திற்கும், அது வரும் நேரத்திற்கும் சம்பந்தமிருப்பதாக நம்மால் நினைத்தும் பார்க்க முடியாது. தொடர்பற்ற எந்த இரண்டு செயல்-களையும் நாம் காண முடியாது. நாம் அத்-தொடர்பை அறிவதில்லை.

***முடியாதது பிறருக்கு முடிய விரும்புபவனுக்கு முடியாததில்லை.***

❋❋❋

Vol. I Issue 5 August 2011
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11


## புதிய வெளியீடுகள்

ESSAYS ON ACCOMPLISHMENT — ரூ.150/-
N.Asokan

**கர்மயோகியின்**

அன்னையின் ஆன்மீகப்பரிசு — ரூ.100/-

லைப் டிவைன் - கருத்துகள் — ரூ.100/-

பரம்பொருள் III — ரூ.200/-

எங்கள் குடும்பம் (பாகம் 2) — ரூ.250/-

யோக வாழ்க்கை விளக்கம் IV — ரூ.150/-

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

லைப் டிவைன் விரிவுரைகள் — ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

SATYA JYOTHI — ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆ : (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆ : (044)-24347191


Vol. I Issue 5 August 2011

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## ஆகஸ்ட் 2011